
# காஞ்சி

நிறுவனர்:

17-11-68

விலை 20 காசு




'முள் பீடம்!'

குழந்தையைக் கண்டால் அஞ்சி யோடும் துன்பம். வயதானவர்களை, கருத்தறிந்தவர்களை எப்படி எல்லாமோ ஆட்டி விடுகிறது.

துன்பத்தை ஆசையின் செல்லப் பிள்ளை என்கிறார்கள். ஆனால் சில நேரங்களில் ஆசை என்னும் தாய் இல்லாமலே பிறந்து விடுகிறது. துன்பத்தின் பிறப்பே வியப்பானது. ஒரு நேரத்தில் சொல்லில் பிறக்கிறது. ஒரு நேரத்தில் செயலில் பிறக்கிறது; சொல்லும் செயலும் இல்லாதபோது உடல் வியாதியால் பிறக்கிறது.

துன்பம், நிலையான உருவமில்லாத, கவர்ச்சியில்லாத ஓர் அருவருப்பான சொல். ஆனால் அது கட்டி அணைக்காத நெஞ்சமே இல்லை; துன்பம் வரும்போது வேகமாக வரும். நெஞ்சை விட்டுச் செல்லும்போதோ ஆமை நடை.

மனித உடலில் எங்கோ மறைந்துக் கிடக்கும் நெஞ்சுக்குள் எப்படியோ புகுந்துவிடும். துன்பம். புகுந்து ஒரு சில விநாடிக்குள் ஒளி உமிழும் கண்களை இருள் மயமாக்கி விடுகிறது. புன்சிரிப்பு தவழும் இதழ்களைக் கொன்று விடுகிறது. இன்னும் சொன்னால் மனித உருவத்தையே கவர்ச்சி இல்லாமல் செய்து விடுகிறது.

கோடிக் கணக்கான மக்களின் ஒரே பகைவன் துன்பம், உலகம் தோன்றிய நாள் முதலாய் இன்று வரை, பல்லாயிரக் கோடி மக்கள் தோன்றி துன்பத்தை எதிர்த்து எவ்வளவோ போர் இட்டு இறுதியில் மாண்டு போனார்கள்.

துன்பத்தைக் கொல்ல எவராலும் முடியாதா? துன்பம் என்ன சாகா வரம் பெற்றதோ? என்று பலர் ஆராய்ந்த வண்ணமே இருக்கின்றார்கள். என்னப் பயன்?

துன்பம், நெஞ்சை நெருங்காமல் தடுக்க ஒரே வழி இறையடிச் சேர்வது என தெய்வீக பெரியார்கள் கண்டுப் பிடித்தார்கள். இறையடிச் சேர மதவழி என்றார்கள். மதவழி பெரிது. அதிலும் குறுக்கு வழி சமயம் என்றார்கள். சமயத்தை விட மிக குறுக்கு வழி குரு என்றார்கள், மக்கள் எவ்வழிச் சென்றும் துன்பம் நெஞ்சை விட்டப் பாடும் இல்லை. விலகிச் செத்தப்பாடும் இல்லை.

செய்ய வேண்டியதைச் செய்யாமல், கடவுளை நினைத்து கசிந்து கண்ணீர் மல்கி அழுதால் மட்டும் கடவுள் துன்பத்தை கொன்று விடுவாரா? இல்லை.

பாவம்! அவரே துன்பத்தால் தாக்கப்பட்டுத் தத்தளிக்கிறார். ஆமாம்! உயிரினங்களில் எல்லாம் மிக உயர்ந்த உயிர் இனமாக மனிதனைப் படைத்தார். அவரால் படைக்கப்பட்ட அதே மனித இனத்தை இன்று அடக்கி ஆள முடியாமல் அல்லல்படுகிறார். துன்பமோ அவரை கொல்லாமல் கொல்லுகிறது. துன்பத்திற்கு பயந்தோ என்னவோ அவர் எங்கோ மறைந்து கிடக்கிறார்.

முற்காலத்தில், துன்பம் இவ்வுலகில் குறைவாக இருந்தபோது கடவுள் மக்களை நோக்கி வந்ததாக புராணங்கள் கூறுகின்றன. துன்பம் அதிகரித்ததும் கடவுள் மறைந்து விட்டார். அவர் ஆற்றல் படைத்தவர். அதனால்தான் அவர், எவரும் கண்டுப் பிடிக்காத அளவுக்கு மிகவும் நுண்மையாக மறைந்துக் கிடக்கிறார். துன்பத்திடமிருந்து தப்பித்துக் கொள்ள இப்படி மறைந்துக் கொள்வதுதான் அவர் கண்டுப் பிடித்த ஒரு சிறந்த வழியோ!

மனிதனை நோக்கி கடவுள் வந்தார். இப்போது கடவுளை நோக்கி மனிதன் செல்ல முயற்சிக்கிறான். துன்பத்தின் பிடியிலிருந்து தப்பித்துக்கொள்ள. இது எல்லோராலும் முடியக் கூடியச் செயலா?

துன்பத்தை முதன் முதல் எதிர்த்தும், எதிர்க்க தத்துவத்தைச் சொல்லியும் தந்தவன் புத்தன். அதன் பிறகு பல்லாயிர பெரியார்கள் தோன்றி துன்பத்தை ஒழிக்க பல்வகையாக முயற்சி செய்தனர். இன்றும், அப்பெரியார்கள் வழியில் நின்று எல்லோரும் முயன்றால் வெற்றிப் பெற முடியும்.

ஆனால் அப்பெரியார்கள் உருவமும் தத்துவமும் உள்ளத்தில் இருந்தால்தானே? அவர்கள் உருவப் படமெல்லாம் கண்ணுக்கு விருந்தளிக்கும் படங்களாகவும், தத்துவமெல்லாம் ஏட்டிலே தூங்கும் அழகான அச்சு எழுத்துக்களாகவும் இருக்கும் போது எங்கே துன்பத்தைக் கொல்ல முடியும்?

துன்பத்தைக் கொல்ல முடியா விட்டாலும் விரட்டி அடிக்கக் கூடவா வழி இல்லை! ஏன் இல்லை? துன்பத்தின் பகைவனை நட்பாக்கிக் கொள் என்கிறார்; வள்ளுவர்.

துன்பத்தின் பகைவன யார்?

மகிழ்ச்சி!

ஆம்!!

ஆமாம், துன்பத்தை எதிர்த்து வெல்லும் ஆற்றல் படைத்தது மகிழ்ச்சி!

துன்பத்தை விரட்ட, துன்பம் வரும்போது மனம் கலங்காமல் மகிழ வேண்டும்; இதழ் ஓரத்தில் புன்சிரிப்பை தவழவிட வேண்டும். இதை தவிர துன்ப்த்தை எதிர்த்து வெல்ல வேறு சிறந்த வழியும் இல்லை. சுருக்கமான வழியும் இல்லை என்பது வள்ளுவரின் சிறந்த முடிவு.

எனவே துன்பத்தை விரட்ட வள்ளுவர் வழிச் செலலுவோம் வாரீர்! வாரீர்!

"இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்"

குறள் 621

—பெங்களூர் மு. நரசிம்மமூர்த்தி

# துன்பத்தை  விரட்ட......



மேம்பாடு எனக் கூறப்படும் மேன்மையினை, ஒழுக்கத்தின் வாயிலாகவே பெறமுடியும், ஒழுக்கம் தவறிய நிலையானது பழியைக் கொண்டுவந்து சேர்த்துவிடும். அதனின்றும் மீளுவதும் அரிதாகிவிடும். —குறள் (137)


# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 . ஆறுமாதம் ரூ. 5

மலர் 5 17—11—68 இதழ் 17


## பாராட்டி வரவேற்கின்றோம்!

நாளுக்கொரு யூகம், வேளைக்கொரு ஹேஷ்யம் என்று ஏடுகளாலும், இதழ்களாலும் கணித்துரைக்கப்பட்டு, ஒரு பரபரப்புச் செய்தியாக விளம்பரப் படுத்தப்பட்ட சென்னை மாநகர் மேயர் தேர்தல், பரபரப்பை எதிர்பார்த்து கற்பனைக்கோட்டைக்குள் லாலி பாடிக் கொண்டிருந்தோருக்கு மிகப் பெரிய ஏமாற்றத்தைத் தந்துவிட்டு முடிவு பெற்றிருக்கிறது.

தோழமைக் கட்சிகளின் ஆதரவுடன் பெரும்பான்மை கொண்டுள்ள திராவிட முன்னேற்றக் கழகம், தன் கட்சி மேயரையும், துணை மேயரையும் மீண்டும் மாநகருக்குத் தந்துள்ளது.

மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வேலூர் நாராயணன் அவர்களும், துணை மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கோவிந்தசாமி அவர்களும் ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மேயர் தேர்தல், போட்டியுடன் நடக்கும்—அமளி பிறக்கும் என்றெல்லாம் சிலர் கனவு கண்டுப் பிதற்றி வந்ததற்கு மாறான செய்தி கண்டுத் திகைத்துப் போயிருக்கக்கூடும்.

கழகத்தைப் பற்றிக் கணக்குப்போடும் வெளியார், இதுவரையில் சரியான முறையில் கணித்ததில்லை. இனியும் அப்படித்தான் என்பதை எடுத்துக் காட்டுகின்ற முறையில் எல்லாம் ஒழிங்கான முறையில்—ஒருமனதான முறையில் நடைபெற்று முடிந்திருக்கின்றன. மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. நாராயணன் அவர்கள் கழகக் கொள்கைகளுக்குத் தன்னை முழுதுமாக ஒப்படைத்துக் கொண்டுள்ள ஒரு வழக்கறிஞராவார், அதுபோலவே துணைமேயராக வந்துள்ள திரு. கோவிந்தசாமி அவர்களும் கழகத்துக்கே தன்னைத் தந்துவிட்டவர். இருவரும் இளைஞர்கள் இருவரில் எவரும் 40 வயதைக் கூட எட்டிப் பிடியாதவர்கள்.

துடிக்கும் இளமைக்குச் சொந்தக்காரர்களாக இருக்கும் இருவரும் உணர்ச்சித்துடிப்போடு செயலாற்ற வல்ல செயல் மறவர்கள்.

மாநகராட்சிப் பணிக்கு கட்சி அரசியல் தேவை இல்லை என்ற கருத்து வலுப்பட்டு வரும் நாள் இது. கழகத்திலிருந்தே—கழகமே இருவரையும் பதவியில் அமர்த்தி இருந்தாலும் பதவிப் பொறுப்பேற்றுக் கொண்டதற்கு அப்புறம், மாநகரம் முழுமைக்கும் சொந்தக்காரர்களாகிவிட்டிருக்கிறார்கள்.

கட்சி அரசியல் கடந்த ஒரு நிலையில் இனி அவர்கள் செயலாற்றவேண்டிய மகத்தான கடமைக்குள் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இதுவரையில் இல்லாத அளவுக்கு எதிர்க்கட்சியான காங்கிரஸ் ஓரளவு சமதையான எண்ணிக்கையுடன் மாநகர மன்றத்துக்குள் நுழைந்திருக்கிறது.

கழக நிர்வாகத்துக்கே முற்றுப்புள்ளி வைத்துவிட வேண்டும் என்ற அரிப்பில் தேர்தலில் ஈடுபட்டு, செயல்பட்டும் வந்துகொண்டிருக்கும் காங்கிரஸ், மாநகரப்பணி சீராக, செம்மையாக நடைபெற தன் முழு ஒத்துழைப்பையும் தருமா? என்பதற்குப் பொறுத்துப்பார்த்துதான் விடைபெற வேண்டும்.

ஆனால் மேயர் பொறுப்புக்கு வந்திருப்போர், தன் அன்பான ஆதரவான ஆற்றல் கொண்டு, அவர்களையும் தமக்கு உடன்பட்டவர்கள் ஆக்கிக்கொள்ளவேண்டும். அந்த திறன் இருவருக்கும் உண்டு என்று மனதார நம்புகிறோம். எனவே, பதவி ஏற்றுக்கொண்டு விட்டதன்பின், பணி ஒன்றையே முக்கியக்கடனாகக் கொண்டு, தேர்தலின்போது எழுப்பப்பட்ட பல குற்றச்சாட்டுக்கள் மிகைப்படுத்தப் பட்டவை என்று நிரூபிக்க வேண்டிய செயலில் ஈடுபடவேண்டும் என்றே விரும்புகிறோம்.

பணியாற்றுவதற்குத்தான் பதவிகளே யொழிய, பதவி இருந்தால்தான் பணியாற்ற முடியும் என்று காங்கிரஸ் நம்புவதுபோல கழகம் என்றும் நினைத்ததில்லை. நம்பியதுமில்லை. இதுவரை அதனைக் கழகம் நிரூபித்துக் காட்டியும் வந்திருக்கிறது.

பதவிப் பொறுப்புக்கு வந்துள்ள மேயர், துணை மேயர் அவர்களும், மற்றும் உறுப்பினர்கள் அனைவருமே, மாநகரத்தின் தூய்மை, தேவை இவைகளிலே முழுமையும் கவனம் செலுத்திச் செயல்படுவார்கள் என்பதில் ஐயமில்லை. செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்வதும் ஒரு மரபுக்குத்தான்!

நல்லதொரு வழக்கறிஞரின் தலைமையில் செயல்பட விருக்கின்ற மாநகராட்சி மன்றம், நல்ல வழக்கங்களையும், நீதி. நெறிமுறைகளையும் கடைப்பிடித்து மரபினைக் காப்பதோடு, நகரின் சிறப்புக்கும் சீரிய தொண்டாற்றும் என்ற நம்பிக்கையை மீண்டும் படைத்துக்கொண்டு, மேயர், துணைமேயர்களைப் பாராட்டி வரவேற்கின்றோம்!

*

# கேள்வி ? பதில்

1. 'மதுவிலக்கு கூடாது' என்ற கருத்துடைய நிஜலிங்கப்பா, காங்கிரசுத் தலைவர் பதவியில் இருக்கத்தக்கவர்தானா?

காங்கிரசுக் கட்சியைக் கலைத்துவிட வேண்டும் என்பது காந்தியடிகள் விருப்பம். நூற்றாண்டு விழாக் கொண்டாடும் நேரம் இது. இந்த நேரத்தில்கூட இது பற்றிக் காங்கிரசார் நினைத்துப் பார்க்க விரும்புவதில்லை. இது போல்தான் மது கூடாது என்பதும் காந்தியார் வேண்டுகோள். காந்தியடிகளையே மதியாதவர்கள், அவரது விருப்பத்துக்கு மதிப்புக் கொடுப்பார்கள் என்பது மட்டும் எப்படி முடியும்? கூடை செங்கல்லும் பிடாரிதான்! நிஜலிங்கப்பா மட்டும் விதிவிலக்கா என்ன?

2. லாட்டரி சீட்டுகள் வாங்கிக் கொள்ள வேண்டுமென அரசு ஊழியர்கள் கட்டாயப்படுத்தப் படுவதாக ஒரு செய்தி வந்ததே, உண்மையா அது?

உண்மைதான். பள்ளி ஆசிரியர்களும், மற்றும் பல தரப்பட்ட அலுவலக ஊழியர்களும், கிராமாதிகாரிகளும் கூட கட்டாயப் படுத்தப் பட்டிருக்கிறார்கள் பரிசுச் சீட்டு பெற்றுக்கொள்ள வேண்டுமென. முறையற்ற செயல்தான் இது! என்ன செய்வது, இந்தியா முழுதும் தமிழக அரசின் ஆணைக்குட்பட்ட பகுதியாக இல்லையே! அரியானா அரசு இப்படிக் கட்டாயப்படுத்துகிறதாம்! இதனைத்தான் அந்த ஏடு மாற்றி–திரித்து செய்தி வெளியிட்டிருக்கிறது போலும்!

3. மாநகராட்சித் தேர்தலில், காங்கிரஸ் வளர்ந்துவிட்டிருப்பதற்குச் சரியான காரணம் என்ன?

ஒரு அரசியல் கட்சி, தன் தோல்வியை ஒப்புக்கொள்வதென்பது பாவகரமான செயலல்ல — அருவெறுக்கத்தக்கதும் அல்ல. சென்னை மாநகராட்சித் தேர்தலில் காங்கிரஸ் "வளர்ச்சி" அடைந்திருக்கிறதென்பது, என்ன கணக்கு என்றே தெரியவில்லை. "சரியான" காரணம் கேட்டிருக்கிறீர்கள். கழகக் கட்டுப்பாட்டை மீறிப் போட்டியிட்ட சில பேருக்குத் "தீனி" கொடுத்து, அதன் மூலம் பனிரெண்டுக்கு மேற்பட்ட இடங்களை காங்கிரஸ் தனதாக்கிக் கொண்டிருக்கிறது. இது வளர்ச்சிதான் என்றால் உங்கள் மகிழ்ச்சிக்குக் குறுக்கே யாரும் வரத் தேவை இல்லை.

4. மாநிலங்களில், அதிக அதிகாரத்தோடு கூடிய மத்திய போலீஸ், ஆதிக்கம் பெற்று விடுமா?

மத்திய அமைச்சராகவிருந்த கிருஷ்ணமேனன் தலைமையில், இதற்காக ஒரு எதிர்ப்புக் குழு அமைக்கப்பட்டு, மத்திய அரசின் மசோதாவுக் கெதிராக வழக்காடும் ஒரு முடிவு மேற்கொள்ளப் பட்டிருக்கிறது, பல மாநிலங்களின் சார்பில். பொறுத்துப் பார்ப்போம்.

5. பக்தவத்சலனார் கேட்ட பிறந்த நாள் பரிசு கிடைக்கவில்லையே ஏன்?

மாநகராட்சித் தேர்தலில் காங்கிரஸ் பெரும்பான்மையைப் பரிசாகக் கேட்டதைக் குறிப்பிடுகிறீர்களா? கடந்த சில ஆண்டுகளில் பக்தவச்சலனார் கேட்டவை பல! கிடைத்தவைதான் பூஜ்யம்! தகுதிக்கு மீறி ஆசைப்படக்கூடாது என்பதற்கு இதனையும் ஒரு பாடமாக ஏற்றுக் கொள்ளலாமே!

6. யோக்யமாக நடந்து, மக்கள் சேவைக்காகவே தங்களை அர்ப்பணித்துக் கொள்வதாக சென்னை நகராட்சி காங். உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டதிலிருந்து தெரிவதென்ன?

இதுவரையில் தங்களில்யாரும் யோக்யமாக நடந்துகொண்டதில்லை — இதுவரையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் மக்கள் சேவைக்குத் தங்களை ஒப்படைத்துக் கொண்டதில்லை என்பதை வெளிப்படையாக ஒப்புக் கொள்கிறோம்! என்றுதெரிவதாக நினைக்கிறீர்களோ!

7. "சுதேசமித்திரனி"ன் சேட்டைகள் அதிகமாகிக் கொண்டு வருவதைக் கவனித்தீர்களா?

கவனித்துக் கொண்டு தான் வருகிறோம். ஒரு அரசானாலும் அதற்கு மக்களாதரவு நிரம்ப வேண்டும். அதேபோல் ஏடு, இதழானாலும் அதற்கும் மக்களாதரவு நிரம்பவேண்டும். அரசு, தன் திட்டங்கள், செயல்கள் கொள்கைகள் மூலம் அந்த ஆதரவைத் திரட்டிக்கொள்கிறது. அந்த இதழ், பரபரப்பான செய்திகள், தலையங்கங்கள் மூலம் ஆதரவு தேடிக்கொள்கிறது. அல்லாமல் பத்திரிகைகளுக்குச் சில விசேஷ சுதந்திரமும் உண்டு. அரசு பற்றிக் கருத்துரைக்க இதழ்களுக்கு முழு உரிமை உண்டு. ஜனநாயகக் கோட்பாட்டுக்கு அது முழு முக்கியத்துவமும்கூட. ஆனால் பொய்ச் செய்திகள் — திரிக்கப்பட்ட விமர்சனங்கள் மூலம் அந்த உரிமைகளுக்குக் 'களங்கம்' உண்டாக்கக்கூடாது. சுதேசமித்திரன் எதையோ விதைக்க விரும்புகிறது — அறுவடையில்தான் தெரியவேண்டும், விளைந்தது என்ன என்பது! பொறுத்துக் கொள்வோமே!

8. பொதுவுடைமை பேசும் ராமமூர்த்தி, ஒரு இலட்ச ரூபாய் நிதி நன்கொடை பெறலாமா?

திரு. ராமமூர்த்தி, பொதுவுடைமை பேசுகிறார் என்பதற்காக அவருக்கு வாயும், வயிறும், குடும்பமும் இருக்கக்கூடாது என்பது பொருளா? அரசியலில் தங்களை முழுமூச்சாக ஈடுபடுத்திக் கொண்டிருப்பவர்களது குடும்பங்கள் பல, தவிக்கின்ற தவிப்பினை உலகுக்குச் செய்தியாக்கித் தருவதில்லை. கௌரவமும், மதிப்பும் அதனைத் தடுத்து விடுகின்றன! தொண்டர்கள் இதனை அறிந்து, அந்த தவிப்பினைப் போக்க விரும்புவது எவ்வகையாலும் வரவேற்கத் தக்கதே!

9. மாணவர் பிரச்னைகள் தீர வழியே இல்லையா?

இல்லாமலென்ன? அரசியல் கட்சிகள் அனைத்தும் கூடி இனி, மாணவர்கள் இருக்கும் பக்கம் திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை என்று முடிவெடுத்துக் கொண்டால், எல்லா பிரச்னைகளும் தீர்ந்து போகும்!

★

'ஜப்பான் சரக்கு!' என்று கிண்டல் செய்யப்பட்ட காலம் ஒன்றிருந்தது. குறைவான விலைக்குக் கிடைக்கும், கொஞ்ச நாட்களுக்கு மேல் தாங்காது, உறுதியாயிருக்காது, என்று எல்லோரும் எண்ணியதுண்டு. 'ஜெர்மனியில் செய்தது'' (Made in Germany) என்றால், கெட்டியானது, தரமானது என்ற கருத்தும் ''ஜப்பானில் செய்தது'' என்றால், உதவாக்கரையானது என்கிற எண்ணமும், நம்மிடம் மட்டுமல்ல உலகெங்கும் இருந்தது.

ஆனால்! ஆனால்!!

இன்று எல்லா நாட்டுச் சரக்கையும்விட மேன்மையானது, உறுதியானது, நாகரீகமானது என்கிற கருத்து எல்லோரிடமும் இப்போது ஏற்பட்டுவிட்டது. அமெரிக்காவைவிட ஜெர்மனியைவிட — ஏன்? உலகத்திலுள்ள எந்த நாடுகளையும்விட —நேர்த்தியான சரக்கு ஜப்பான் சரக்கு! எனப் புகழக்கூடிய பெயர் ஏற்பட்டிருக்கிறது. கடிகாரமானாலும், டிரான்சிஸ்டர் ரேடியோக்களானாலும், டெலிவிஷனானாலும், மோடார் சைகிளானாலும், மூன்று லட்சம் டன் (மூன்று லட்சம்! டன்!!) எடையுள்ள எண்ணெய் தூக்கும் கப்பலானாலும், 'ஜப்பானில் செய்யப்பட்டது'' (Made in Japan) என்றால், 'சீப்'பாயிருக்காது, தரமாகயிருக்கும் என்கிற பெருமை ஏற்பட்டிருக்கிறது.




சாதாரணமா, இது?

அல்ல! அல்ல! எள்ளி நகையாடப்பட்டது, எல்லோரும் போற்றுமளவுக்கு இருபதே ஆண்டுகளில் மாறுதல் பெற்றுள்ளது என்றால் இந்த மகத்தான புரட்சியை வியக்காமலிருக்க முடியாது.

* * *

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் ஜப்பானுக்கு வந்த வெளிநாட்டு வியாபாரிகள் சின்னஞ்சிறு முதலீட்டைக் கொண்டு சீக்கிரம் இலாபம் தேடும் எண்ணங்கொண்டவர்களாயிருந்தார்கள். அதைப் பார்த்த ஜப்பானிய தயாரிப்பாளர்கள், வியாபாரிகளின் ஆசைகளை வைத்து, ''இப்படிப்பட்ட சரக்குகள்தான் விற்கும்போலிருக்கிறது!'' என்று சீப்'பான சாமான்களை உற்பத்தி செய்து குவித்தார்கள். வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கென்றே மட்டமான, சீக்கிரம் உடையக்கூடிய, பொருள்கள் தயாரிக்கும் இடங்கள் மண்டின.

இன்னொரு காரணமும் உண்டு. 1853-ல் டோக்யோ குடாவுக்குள் ஒரு அமெரிக்க இராணுவக் கப்பல் வந்தபோது ஜப்பானிய மன்னரும் அரசும் அதைக் கடுமையாக எதிர்த்தார்கள். சீனா, இந்தியா, தென்கிழக்கு ஆசிய நாடுகளைப்போலத் தங்காது ஜப்பானும் மேற்கத்திய நாடுகளின் பிடியில் சிக்கிவிடாமலிருக்க வேண்டுமானால், தன்னைத் தற்காத்துக் கொள்வதற்காக வலிவான இராணுவமும் கப்பற்படையும் இருக்கவேண்டும் என்று கருதி அந்த முயற்சியிலீடுபடலாயினர். இதனால் ஜப்பானுடைய 'மூளை' முழுதும் இராணுவ தளவாடங்கள் பக்கமே சென்றது. இன்னொரு நாட்டுக்கு அடிமைப் படக்கூடாது என்று ஆசைப்பட்ட ஜப்பான் அருகிலுள்ள நாடுகளான பார்மோசா, மஞ்சூரியா, கொரியா போன்றவைகளை அடிமை கொண்டதோடு, இரண்டாவது உலகப் போரின்போது தாய்லாந்து பர்மா, மலேசியா, சிங்கப்பூர் முதலியவைகளையெல்லாம் வீழ்த்தி, இந்தியாவின் எல்லை வரையில் வந்து நின்றது.

இந்தியாவைவிட நாலில் ஒரு பங்கு மக்கள் தொகையை அதாவது 10 கோடிப்பேர் மட்டும்வாழும் ஜப்பான் — நித்யகண்டம் பூரணாயுசுபோல பூகம்பங்களைக்கொண்ட ஜப்பான்— வானத்திலிருந்து பார்த்தால் ஒருபெரிய தண்ணீர்த் தொட்டியில் தாமரையிலையைப் போட்டது போல் காட்சியளிக்கும் ஜப்பான்— இரண்டாவது உலகப் போரின்விளைவாக தோல்வியுற்ற ஜப்பான், இந்த இருபதாண்டுக் காலத்தில்தனது வாழ்க்கைத் திசையைத் திருப்பிக்கொண்டு இந்த அளவுக்கு வாணிபத்துறையில் முன்னேறியிருப்பது விந்தை! விந்தை!

எப்படி முடிந்தது?

''வீரத்தால் வெல்ல நினைத்தோம்; தோற்றோம்! நம்மை வீழ்த்திய அதே அமெரிக்காவை விவேகத்தால், நமது உழைப்பால் வீழ்த்துவோம்,'' என்கிற வெறி தவிர, அவர்களது இந்த வெற்றிக்கு. வேறு காரணம் எனக்குத் தென்படவில்லை. எந்தவிதமான ஆயுதத் தளவாடங்களும் ஜப்பான் செய்யக்கூடாது என்று போர் நிறுத்த ஒப்பந்தத்தில் அமெரிக்கா போன்ற நாடுகள் வலியுறுத்தியதன் காரணமாக தளவாட உற்பத்திக்கு வழியில்லாமற் போயிற்று. ஆனால், ஆலைகள்! அவைகளுக்கு வேலை வேண்டுமே?

மக்களுக்குப் பிடித்தமான சாமான்களை, கவர்ச்சியான வகையில், அமைதியாக, தயாரித்துத் தள்ளுவது என்று முற்பட்டார்கள் ஜப்பானியர்கள். மழையையும் மனித, சக்தியையும் தவிர இயற்கைவளம் என்பது

எள்ளளவும் கிடையாது ஜப்பானில்! இரும்பு—நிலக்கரி—இப்படிப்பட்ட எந்தப் பொருளும் இல்லாத நாடு ஜப்பான். இயற்கை வளமேயில்லாத நாடு, இன்று எல்லாப் பொருள்களேயும் 'சப்ளே' செய்கிறது உலகுக்கு!!

ஆ கா!

விமானம் செய்வதில் அமெரிக்கர்தான் சிறந்தவர்கள் என்பார்கள். இன்று மிஞ்சி விட்டது ஜப்பான்! கப்பல் கட்டுவதில் பெயர் போனவர்கள் பிரிட்டிஷார் என்பார்கள்—பிரிட்டிஷ் கம்பெனிக்கே பெரிய கப்பல் செய்து விற்கிறது ஜப்பான்! கடிகாரம் கண்டு பிடித்தவர்கள்—தரமான கடிகாரம் விற்பவர்கள்—என்கிற பெயர் ஸ்விட்சர்லாந்துக்கு உண்டு; ஆனல், இன்று, ஜப்பான் தலைசிறந்து நிற்கிறது ஸ்விசைவிட!! ஆகாய விமானம், கப்பல், கடிகாரம், ஆகியவைகளில் மட்டுமல்ல, மிகப் பெரிய இந்திரமானலும், மிகமிகச் சாதாரண பொருளானலும் போட்டி போட்டுக் கொண்டு 'முதலிடம்' பெற்றுவிட்டது ஜப்பான். இதில் வேடிக்கை—இரும்போ, நிலக்கரியோ, செம்போ, ஈயமோ—வெளிநாட்டிலிருந்துதான் வரவேண்டும்! தன்னுட்டில் கிடையாது!!

இரண்டாவது போர் முடிந்ததும் ஜப்பானில் கொண்டுபோய் 5 லட்சம் அமெரிக்கத் துருப்புகள் வைக்கப்பட்டார்கள். வாங்குவதற்கென்று ஒரு பொருளும் கடைகளில் இல்லாமல் திண்டாடினுர்களாம் 20 ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள்! ஆனல், இன்று ஜப்பானியக் கடை வீதிகளில் ஏராளமான அமெரிக்கர்களேப் பார்க்கலாம்!!

* * *

விழிப்பு மிக்க ஜப்பானியத் தயாரிப்பாளர்கள், போருக்குப்பின்னுள்ள சூழ்நிலையைப் புரிந்து கொண்டார்கள். குண்டுகளும், பீரங்கிகளும் செய்து கொண்டிருந்த தொழிலாலைகள் அழகு அழகான துணிகளேயும், அதுபோன்ற மற்ற பொருட்களேயும் செய்யும் இயந்திரக் கூடங்களாகத் திருத்தியமைக்கப்பட்டன! (திருத்தியமைக்கப்பட்டன—என்று ஒரு வார்த்தையில் எழுதுகிருேம். ஆனல், சாதாரணமான காரியமா? அது!!)

---

### இத்தனை அழகு—அத்தனை வயது!

லண்டனில் ஒரு நாரிமணி தன்னை அழகுபடுத்திக்கொள்வதே குறிக்கோளாகக் கொண்டிருந்தாள். அதற்காக ஏராளமான பணமும் செலவழிப்பாள். ஒருநாள் ஷாவிடம் அவள், "என்னைப் பார்த்தால் எவ்வளவு வயது இருக்கும் என்று தோன்றுகிறது, சொல்லுங்கள் பார்க்கலாம்" என்றுள். அதற்கு ஷா, "உன்பல்லைக்கவனித்தால் 18 இருக்குமென்றுதோன்றுகிறது. தலை மயிரைப் பார்த்தால் 19 வயது இருக்குமென்று தோன்றுகிறது. நீ நடந்து கொள்கிற விதத்தைப் பார்த்தால் 14 வயதுப் பெண்ணைப் போலிருக்கிறது" என்றுர்.

அப்பெண்ணுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. உச்சிக் குளிர்ந்துவிட்டது. "மிகவும் மகிழ்ச்சி; இருந்தாலும் திட்டமாக என் வயது என்ன இருக்கும். சொல்லுங்கள்?" என்று கேட்டாள். உடனே ஷா "சரி நான் இப்பொழுது சொன்னதையெல்லாம் கூட்டு பார்க்கலாம் 18, 19, 14 இம் மூன்றும் சேர்ந்ததால் என்ன விடை? 51தான் உன் வயது!" என்று பதிலளித்துவிட்டு தலை நிமிர்ந்து பார்ப்பதற்குள் பெண் மாயமாய் மறைந்துவிட்டாள். தகவல்: இ. சர்தார் மன்சூர்

---

காமிராக்கள், பூதக்கண்ணுடிகள் செய்வதில் ஜெர்மனிக்குப் போட்டியாக ஜப்பான் உருப்பெற்றது ர/சமான வரலாருகும். போரின போது, விமானத்திலிருந்து எதிரிகளின் ஊர்களைப் பார்க்க பீரங்கிகள் வழியாக எதிரிகளின் முகாம்களைப் பார்க்க, நுனுக்கமான சக்திவாய்ந்த பூதக்கண்ணுடிகளை, விமானப்படைக்கும் கப்பற்படைக்கும் ஜப்பான் தயார் செய்தது. போர் முடிந்ததும் ஜப்பானின் பெரிய கம்பெனிகளில் ஒன்ருன நிகோன் கம்பெனி, 25 000 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்ய நேர்ந்தது. இந்த நெருக்கடியைத் தவிர்க்க மேற்படி கம்பெனி, அதே தொழிலாளர்களை வைத்து, நல்ல பூதக்கண்ணுடிகளைக் கொண்ட காமிராக்களைச் செய்ய ஆரம்பித்தது. இன்று ஜப்பானியக் காமிராக்கள் ஜெர்மன் காமிராக்களைத் தோற்கடித்து விட்டன. (என்னிடம் ஒரு காமிராவைக் காட்டினுர்கள். ஐந்து நிமிடத்துக்குள் கலர்ப்படம் எடுத்து அதன் பிரதியை 'பிரிண்ட்' செய்து உடனே நம் கையில் கொடுத்து விடுகிருர்கள்.)

1920 லிருந்து 1930 வரையில் போர்த்தளவாடங்களைச் செய்து கொண்டிருந்த பல கம்பெனிகள் மோடார்சைகிள், கார்கள, ரேடியோக்கள், என்று செய்ய ஆரம்பித்தன. அழிக்கும் பொருள்களைச் செய்து கொண்டிருந்த ஜப்பான் ஆக்கும் பொருள்களைச் செய்து குவித்தது! இன்று எங்கும் அதன் பொருள்கள்!!

## வேலை நிறுத்தம் உண்டா?

இந்தப் 'புரட்சி'' எப்படி ஏற்படமுடிந்தது என்பதை நாம் எண்ணிப்பார்த்தேயாகவேண்டும். எப்படிஜப்பானியப் பொருளாதார அமைப்பு இருக்கிறது என்பதை நாம் முதலில் பார்ப்போம். ருஷியாவைப்போல பொதுவுடைமை நாடில்லை ஜப்பான்! முதலாளித்துவ சமுதாய அமைப்பு என்றே சொல்லவேண்டும். என்ருலும், பல முதலாளித்துவ நாடுகள் பெறமுடியாத இந்த 'வளர்ச்சி' ஜப்பானில் மட்டுமே எப்படி ஏற்பட்டது. அமெரிக்கா போன்ற முதலாளித்துவ நாடுகளில் தனியார் துறைக்கு ஊக்கமளிக்கப்படுகிறது. தனிப்பட்டவர்களும். தனிப்பட்ட முதலாளிகளின் கம்பெனிகளும் தங்களுக்குள் போட்டிபோட்டுக் கொண்டு பொருள்களை உற்பத்தி செய்வது என்கிற சித்தாந்தத்தை அவர்கள் வைத்துக் கொண்டிருக்கிருர்கள். ஜப்பானிலும் தனிப்பட்ட முதலாளிகள்தான் இருப்பவர்கள்! சரியாகச் சொன்னுல் ஜப்பானின் பொருளாதாரமே ஏழே ஏழு கம்பெனிகள் வசம் இருப்பதாகக்கூடச் சொல்கிருர்கள், இருந்தும், பொதுவுடைமை நாடுகளில் மட்டுமே காணமுடியும் என்று கருதப்படுகிற உத்வேகமும் உணர்வும் கம்யூனிஸ்டுக் கட்சிக்குச் செல்வாக்கேயில்லாத ஜப்பானில் எப்படிக் காணமுடிகிறது? இது, உய்த்து உணரவேண்டிய ஒரு அரசியல் வாழ்வாகும்.

தொழில் என்பது தனிப்பட்ட முதலாளியால் நடத்தப்பட்டாலும் அது அவனுக்காகவல்ல; அது அவனுடைய சொந்தக் காரியமல்ல; தேசக்காரியம்—நாட்டுக்கான வளர்ச்சிக்குச் செய்யப்படுகிற காரியம் என்று ஜப்பானியர்களால் கருதப்படுகிறது.

சர்க்கார் — வாணிபத்துறை — தொழிலாளர்கள் என்போர் சண்டைபோடும் பங்காளிகளல்ல; சகாக்கள் என்று ஜப்பானில் கருதப்படுகிறது.

இந்த ஆச்சரியமான உணர்வு, தேசீய உணர்வு போல, ஜப்பானியன் ஒவ்வொருவன் மனதிலும் வேரூன்றியிருப்பதால், வேலை நிறுத்தம் போன்றவைகள் காண அரிதாகின்றன.

## முதலாளியின் பங்கு

இப்படிப்பட்ட உணர்வு சராசரி ஜப்பானியனிடம் மட்டுமல்ல; அவனை வேலை வாங்கும் முதலாளிகளிடமும் இருப்பதுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியம்! தொழிலாளர்களைச் சுரண்டிச் சுரண்டி, வாயிலடித்து வயிற்றிலடித்து, தனது பணப் பையைப் பெருக்கிக் கொள்வான் முதலாளி என்பார்கள் கம்யூனிசத் தத்துவ வாதிகள். இயற்கையாக நாம் எதிர்பார்க்கக் கூடியதும் இதுதான். ஆனால் ஜப்பானில், சாதாரண ஜப்பானியனுக்குள்ள உணர்வு முதலாளிகளுக்கும் இருக்கிறது!!

ஒருவன் ஒரு கம்பெனியில் வேலை செய்யச் சேர்வது ஏன்? வாழ! எனவே, வாழ்க்கையில் அவனும் மனிதனாக எல்லாவற்றையும் அனுபவிக்க வசதி செய்து கொடுப்பது தன்னுடைய கடமையென்று கம்பெனி முதலாளி கருதுகிறான். ஆண்டு போனஸ், குடும்பத்தில் நபர்கள் அதிகரித்தால் அதன்படி அலவன்சுத் தொகை, குழந்தைகள் படிப்புத் தொகை, பிரயாணச் செலவு, டாக்டர் செலவு, திடீரென ஆபத்து ஏற்பட்டால் நட்ட ஈடு போன்ற பல சலுகைகள், பல முதலாளித்துவ நாடுகளில் காண முடியாத சலுகைகள், அங்கே தாராளமாக வழங்கப் படுகின்றன. இன்னுமொரு ஆச்சரியம்!

இங்கே ஒருவனை வேலையை விட்டு வீட்டுக்கு அனுப்புவதென்றால் 'அல்வா' சாப்பிடுவதுபோல நிர்வாகம் எண்ணுகிறது அல்லவா? அங்கு அப்படியில்லை! ஒரு மகனை வீட்டை விட்டுப் போகச் சொல்லும் தந்தையைப் போல வருந்தி வருந்தித்தான் வெளியே அனுப்புகிறது, நிர்வாகம்.

ஹொண்டா மோடார் கம்பெனியின் முதலாளி சொய்க்கிரா ஹொண்டா என்பார் சொல்கிறார், "ஒரு முதலாளியின் கடமை, தொழில் எப்படி நடக்கும், எப்படி யெப்படி தொழிலை முன்னுக்குக் கொண்டு வரலாம் என்று முன்கூட்டியே ஆலோசனை செய்து அதற்குத் தக்கபடித் தன்னைத் தயாரித்துக் கொள்வதாகும். வேலை குறைந்துவிட்டது என்று பல தொழிலாளர்களை அவன் வீட்டுக்கு அனுப்பினால். அனுப்பப்பட வேண்டியது அவர்களல்ல, அந்த முதலாளிதான்!" எவ்வளவு ஆழமான சொற்கள் இவை. எண்ண எண்ண எவ்வளவு கருத்தாழம் தென்படுகின்றது.

## தந்தை மகன் உறவு

ஜப்பானிய உற்பத்திப் பொருள்கள் தரமாக விளங்கக் காரணமே முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்குமிடையிலுள்ள இந்த தந்தை–மகன் உறவுதான். அடுத்த காரணம், சர்க்காருடைய ஒத்துழைப்பு. பல நாடுகளில் தொழிலாளிக்கும் முதலாளிகளுக்கும் இடையிலுள்ள 'பாலம்' போலத்தான் சர்க்கார் இருக்கிறது. ஆனால் ஜப்பானில், சர்க்காரின் பணி, நிர்வாகத்துக்கு ஆதரவாகவும், தொழிலாளிக்குத் தோழனாகவும் இருந்து, உற்பத்திப் பெருக்கம் பெருகச் செய்வதுதான்!!

சரக்கின் தரம் கெடாமலிருப்பதற்காக 1967ல் 'ஏற்றுமதி கட்டுப்பாடு சட்டம்' ஒன்றை ஜப்பானிய அரசு செய்தது, ஜப்பானியத் தொழிலாளர்கள் முழுதும் இதற்கு ஆதரவு கொடுத்தார்கள். வெளிநாடுகளுக்கு



அனுப்பப்படும் பொருள்கள், அரசினரால், பலதரப்பட்ட சோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்ட பிறகே, "ஜப்பானில் செய்தது!" (Made in Japan) என்கிற லேபிள் குத்தப் படும்.

நம் ஊர்க் கதையைக் கொஞ்சம் பார்ப்போம்!

வெளிநாடுகளுக்கு விற்குமுன் மாதிரிக்கு ஒரு சரக்கு காண்பிப்பார்களாம். நல்ல சரக்காயிருக்குமாம்! வெளிநாட்டில், கப்பலிலிருந்து இறக்கிப் பார்த்தால், அந்தஅளவுக்குத் 'தரம்' இருக்காதாம். ஒருமுறை, சரக்கு என்று மூட்டையைப் பிரித்தபோது, வெறும் கல்லும், தேவையில்லாத பொருள்களும்கூட இருந்தனவாம்!! நம்மூர் கதை இது.

ஜப்பானில், தனது சரக்குக்குப் பெயர் வரவேண்டும் என்பதில், தொழிலாளிக்கும் அக்கறையிருப்பதால், அவனை ஏமாற்றி எதுவும் செய்ய முடியாது, முதலாளியால்.

## அது மட்டுமல்ல!

'போர்மெனும்' தொழிலாளிகளும் ஒரு மாதத்துக்கு ஒரு முறையோ அல்லது பல முறைகளோ தாங்களாகவே கூடி, தங்களது தயாரிப்புகளைப் பற்றி, விவாதிக்கின்ற ஒருமுறை எல்லா இடங்களிலும் உள்ளது. இதனால் அவர்களுக்குள்ளாகவே குற்றங் குறைகளை நிவர்த்தித்துக்கொண்டு, அதிருப்தி விருப்பம் ஆகியவைகளைப் பரிமாறிக் கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது. வேலை செய்யும் நேரத்திலேயே அப்படிக் கூடிப் பேசலாம் என்று முதலாளிகளும் அனுமதித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட கூட்டங்களுக்கு, "தர உயர்வு வட்டம்" (Quality control circle) என்று பெயர். கிட்டத்தட்ட பதினாயிரத்துக்கு மேற்பட்ட வட்டங்கள் எல்லாத் தொழில்களிலும், இன்று இருக்கின்றனவாம்.

## ஒரு சான்று!

மட் சூஷிடா எலக்டிரிக் கம்பெனி என்பது காருக்கு வைக்கின்ற ரேடியோக்களைச் செய்கின்ற கம்பெனியாகும். இந்தக் கம்பெனியின் "வட்டம்" கூடி, ரேடியோவில் ஒரு கம்பியை எப்படி வளைப்பது என்பது பற்றி ஆராய்ந்தது. வட்ட உறுப்பினர்கள் ஒரு பாகத்தில் ஏற்பட்ட மிக மிக நுண்ணிய பிழையைக் கண்டுபிடித்தார்கள்! அந்தப் பிழை ஏற்பட்டதற்குக் காரணம் "ஸ்க்ரூ டிரைவர்" என்று தெரிந்தது. இதைக் கண்டு பிடித்தது பெரிய இஞ்சினீயர்களல்ல, அங்கு பணி புரியும் மூன்றே மூன்று பெண்கள்!!

# எழுத்துலக மன்னர் டிகன்சு

நள்ளிரவு. இலண்டன்மாநகரம் அமைதியில் ஆழ்ந்திருக்கிறது. இருபது வயது நிரம்பிய ஒருவன் சுற்றும் முற்றும் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி — வெட்கம் கலந்த ஒருவித அச்ச உணர்வோடு வீதியில் நடந்து வருகிருன். தெருக் கோடியில் ஒரு அஞ்சற்பெட்டி. அருகே வந்து நின்று சுற்றிலும் கண்ணேட்டம் விட்டு விட்டு, யாரும் பார்க்கவில்லை என்ற தைரியத்தில், பெட்டியில் ஒரு உரையைப் போட்டுவிட்டுத் திரும்புகிருன். தன் செயலை யாரும் பார்த்துவிடக் கூடாது என்ற அச்சம் அவனுக்கு.

ஒருநாள், தான் எழுதியது பத்திரிக்கையில் வெளிவந்திருப்பதைக் கண்டான். தனது எழுத்துக்களை அச்சிலே கண்ட மகிழ்ச்சியால் ஆனந்தக்கண்ணீர் வடித்தவனுக வீதிகளிலே ஓடித் திரிந்தான். தான் எழுதியதை பகல் நேரத்தில் அஞ்சலில் சேர்க்கக் கூச்சப்பட்டவனும், தனது எழுத்துக்களை முதன் முதலாக அச்சில் கண்டு ஆனந்தக் கண்ணீர்விட்டவனுமான அந்த வாலிபன்தான் உலகப் புகழ்பெற்ற ஆங்கில நாவலாசிரியரான சார்லஸ் டிகன்சு.

வழக்கொன்றின் காரணமாக தந்தை சிறை சென்றுவிடவே, தனது எட்டாவது வயதிலேயே குடும்பத் தலைவனுக்கு உரியபொறுப்பு டிகன்சுக்கு ஏற்பட்டுவிட்டது. அந்த வயதிலேயே உழைக்க ஆரம்பித்துவிட்டார். இதனுல், பள்ளிப் படிப்பைத் தொடர முடியாது போயிற்று. ஒரு தொழிற்சாலையில் 'லேபில்' ஒட்டும் வேலையில் சேர்ந்தார். பின்னர், வேறு இடத்தில் 'குமாஸ்தா' வேலை செய்தார், 'சுருக்கெழுத்து'ப் பயின்று பாராளுமன்றத்தில் 'ரிப்போர்ட்டராக'ப் பணிபுரிந்தார். டிகன்சு சிறுவயதிலேயே கூரிய அறிவும், கற்பனை வளமும் மிக்கவராக இருந்தார். இலக்கியத் துறையில் மிகஆர்வம்கொண்டிருந்தார். தனது ஓய்வை படிப்பதிலும், எழுதுவதிலும் செலவிட்டார்.

''பிக்விக் பேப்பர்ஸ்'' — இந்த நூல்தான் டிகன்சை நாடறியச் செய்தது. தொடராக வந்த நூல் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. தமக்கேயுரிய கிண்டலும் கேலியும் கலந்த நடையில், சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வுகளையும், ஏழை மக்களின் உயர்ந்த பண்புகளையும் எழுதி மக்களைச் சிந்திக்கவைத்தார். டிகன்சின் நூல் வடிவம் பெற்ற முதல் காவியம் இதுதான். தொடர்ந்து, 'ஆலிவர் ட்விஸ்ட்' 'டேல்ஸ் ஆப் டூசிட்டீஸ்' 'டேவிட் காப்பர் பீல்ட்' 'தி ஓல்ட் க்யூரியாசிடி ஷாப்' 'நிகோலஸ் நிகிள்பி' போன்ற நூல்கள் வந்து இலக்கிய உலகில் இவரது பெயரை ''சாகாவரம்'' பெறச் செய்துவிட்டன. கிறிஸ்துமஸ் பண்டிகை தினங்களில் பாடப்படும்— ''கிறிஸ்துமஸ் கரோல்'' என்னும் டிகன்சு இயற்றிய கீதங்கள் இவருக்குத் தனிப்புகழைத் தந்தது.

ஆரம்பக் காலத்தில் டிகன்சு எழுதிய கதைகளுக்குப் பத்திரிக்கைகள் பணம் தரவில்லையென்ருலும், இவரது எழுத்தாற்றலை உலகம் உணரத் தொடங்கியபோது, ஒவ்வொரு வார்த்தைக்கும் மூன்று பவுன் வீதம் கொடுத்தது. ஏழ்மைபால் வாடிய டிகன்சு இப்போது எழுத்தால் பணம் குவித்து தமது ஏழ்மையை விரட்டினுர். தான் சிறுவனுக இருந்தபோது எந்த மாளிகையில் வாழ விரும்பினுரோ, அதே ''கேட்ஸ் ஹில்'' என்னும் அழகிய மாளிகையை வாங்கி அதில் குடிபுகுந்தார். அந்த மாளிகையை டிகன்சு வாங்கிய கதையே மிக வியப்பானது. சிறுவனுக இருந்தபோது ஒரு நாள், தந்தையுடன் சென்று கொண்டிருந்தபோது டிகன்சு, 'கேட்ஸ் ஹில்' மாளிகையைக் கண்டு அதன் அழகில் தன் மனதைப் பறிக்கொடுத்து விட்டார். ''அந்த மாளிகையில் நாம் வாழவேண்டும், அப்பா'' என்று தனது ஆவலை தந்தையிடம் சொன்னுர். அதைக் கேட்டு நகைத்த தந்தை ''மகனே, ஏழைகளான நாம் அம்மாளிகையில் வாழ நினைப்பது முடியுமா...?'' என்ருர். ''ஏன் அப்பா முடியாதா...?'' என ஏக்கத்துடன் கேட்டார் டிகன்சு. ''முடியாது எனச் சொல்ல முடியாது; மகனே! நீ, நினைத்தால் முடியும். விடா முயற்சியுடன் உழைத்தாயானுல், என்ருவது ஒரு நாள் அதில் வாழலாம்'' என்று கூறினுர். தந்தையின் அறிவுரையை ஏற்று முயற்சியுடன் உழைத்து அந்த மாளிகையை வாங்கித்தனது நீண்ட நாளைய விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டார் டிகன்சு.

டிகன்சு ஏழைக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்ததினுல், இவர் ஏழைகளின்மீது தனித்த அன்பும், மதிப்பும் கொண்டிருந்தார். ஏழை எளியார் அநாதைகள் ஆகியோரின் உள்ளக் குமுறல்களையும், அவர்கள் எப்படி வாட்டி வதைக்கப்படுகிருர்கள் என்பதையும் தமது எழுத்துக்களால் சித்திரித்துக் காட்டினுர். இதனுல், இவர் ''ஏழைகளின் நண்பர்'' எனப் போற்றப்பட்டார். இவரைச் சுற்றி மக்கள் கூட்டம் எப்போதும் சூழ்ந்திருந்தது.

நகைச்சுவைப் பாணியில் டிகன்சு எழுதினுலும், போகப் போக இவரது எழுத்துக்கள் படிப்போரைக் கண்ணீர் விட்டு அழச் செய்தது. படிப்போரை மட்டும் இவர் அழச் செய்யவில்லை, எழுதும் இவரே அழுவதுண்டு. ''தி ஓல்ட் க்யூரியாசிடி ஷாப்'' என்ற நவீனத்தில் 'நெல்' (Nell) என்னும் பெண் இறந்து விடுகிற பகுதியை டிகன்சு எழுதும்போது கண்ணீர் விட்டு கதறி அழுதாராம். நீண்ட நாட்கள் வரை இந்த சோகம் அவரை விடவேயில்லை. இந்த நவீனத்தை தொடர்கதையாக எழுதிவந்தார். 'நெல்' மரணத்தறுவாயில் இருப்பதாக டிகன்சு எழுதிய போது, ''அவளைக் கொல்லாதீர்கள்'' என்று எண்ணற்றக் கடிதங்கள் நாடெங்கிலுமிருந்து அவருக்கு வந்ததாம். அந்த அளவிற்கு உணர்ச்சிகரமானப் பாத்திரங்களை டிகன்சு உருவாக்குவார். டிகன்சு எழுதத் துவங்கினுல் அதிலேயே ஆழ்ந்துவிடுவார். கதை எழுதி முடித்துவிட்டு வரும்போது, ஒரு கொலைக்காரனைப் போலவே அவர் தோற்றமளிப்பாராம். இதைப் பற்றி டிகன்சு, ''என்னுடைய கதையில் வரக் கூடிய கதாபாத்திரங்கள் நான் அவர்களை எழுதி முடிக்கும் வரை என்னை உறங்கவோ, உண்ணவோ, ஓய்வுக் கொள்ளவோ விடுவதில்லை'' எனக்கூறியுள்ளார். தான் எழுதிய கதைகளில் இருந்து சில பகுதிகளை மக்கள்முன் படித்து சொற்பொழிவு செய்வார். டிகன்சின் சொற்பொழிவு என்ருல், மக்கள் கூட்டம் பெருந்திரளாக கூடிவிடுமாம்.

1812-ம் ஆண்டில் லாண்ட் போர்டில் ஏழைக் குடும்பமொன்றில் பிறந்த அவர் தமது 58-வது வயதிலேயே இறந்துவிட்டார். ''வெஸ்ட் மின்ஸ்டர் அபே''யில் உள்ள இவரது கல்லறை இன்றும் இலக்கிய அன்பர்களால் வணங்கப்பட்டு வருகின்றது.

—திருபத்தூர் கி. வீரமணி.

# என்றும் நீ வாழ்க!

தங்கநிகர் உள்ளத்தில் தமிழின் எண்ணம்!
தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கே நின்னை ஈந்த
செங்கரும்புச் சொல்லாள! புதுமைச் சித்த!
சீறுகின்ற பகைவர்க்கும் இனிமை யாள!
பொங்கிவரும் பெருநெருப்புப் பசியைப் போக்க
பொன்னான படியரிசித் திட்டம் கண்ட
மங்காத குணக்குன்றே! ஏழை நெஞ்சம்
மகிழ்ந்திடவே வந்துதித்தோய்! வாழ்க வாழ்க!

ஓடிவரும் ஆற்றினைப் போல் மலையின் உச்சி
ஊர்ந்துவரும் அருவியைப்போல், தேனை உண்ண
பாடிவரும் வண்டினைப்போல் பாகுச் சொற்கள்
பாய்ந்துவரும் உம்நாவில்! அடக்கம், அன்பு
தேடிவந்து உம்மிடத்தில் குடியி ருக்கும்!
தீந்தமிழாம் இதயத்தைப் பெற்ற வேந்தே
வாடுகின்ற ஏழைகட்கே உமது ழைப்பை
வழங்கிவிட்டீர் அதனாலே உடல் மெலிந்தீர்.

தலைவனெனில் நீர்தலைவன்! தமிழர் நாட்டின்
தன்மானங் காக்கவந்த கதிரோன்; மண்ணில்
கலையார்ந்த பெருவேந்தன்; ஏழை மக்கள்
கலிதீர்க்கப் பிறந்திட்ட கருணை வள்ளல்
தலைமகனும் வள்ளுவனார் அளித்துச் சென்ற
தமிழ்க் குறளின் வழியினிலே ஆட்சி செய்வோன்
மலைசிறிதாய் மாறிவிடும் அண்ணா! உன்றன்
மாண்புகளை ஒவ்வொன்றாய் அடுக்கிச் சொன்னால்!

நாட்டிற்கு நல்லதொரு மன்ன னானாய்!
நல்லோர்க்கு என்றும்நீ அண்ண னானாய்!
பாட்டெழுதும் புலவர்க்குப் பொருளு மானாய்!
பைந்தமிழை வளர்க்கின்ற சங்க மானாய்!
சேட்டையெலாம் விலக்குகின்ற ஒளியு மானாய்!
கிளர்ந்துவரும் பகையொடுக்கும் வீர னானாய்!
வீட்டினிலே வணங்குகின்ற தெய்வ மானாய்!
விரிந்தபெரும் அறிவொளிநீ என்றும் வாழ்க!

—ஆ. சோசப்.



# பேதை நெஞ்சம்



அனூர் ஜலால்

வழக்கமான பல்லவியோடு உருண்டு கொண்டிருந்தன சக்கரங்கள்! வழியனுப்பிகளின் கை அசைவுகள் ஆடி ஓய்ந்துவிட்டன. உருவங்களைப் புள்ளியாக்கிக் கடந்து கொண்டிருக்கும் திருநெல்வேலி எக்ஸ்பிரஸின் பின் புறத்துச் சின்னஞ்சிறிய சிவப்பு விளக்கும் கங்குல் அணுவாகித் தேய்ந்து மறைந்தது.

பிறந்த வீட்டுக்குச் செல்லும் என் மனைவியை வழியனுப்பிவிட்டு நின்ற நான் வாயிலிருந்த சிகரெட்டின் கடைசி இழுப்பைச்சுவைத்து அனுபவித்து, முடித்து அந்தப் புகைப் பொருளை காலால் மிதித்து நசுக்கி விட்டு வீட்டை நோக்கிக் கிளம்ப முயற்சித்தேன்.

"எழும்பூர் ரயில் நிலையத்தின் முதல் பிளாட்பாரத்தில் புறப்படத் தயாராகி நின்ற ராமேஸ்வரம் எக்ஸ்பிரஸில் பயணம்செய்ய வந்திருந்த மக்கள் தொகையின் தொண தொணப்புலேசான குளிர் காற்றோடு கலந்து பரந்து சில்லறை வியாபாரிகளின் அறைகூவல் அனைத்துக் குரலையும் மிஞ்சி ஒலித்தது. புகை வண்டி நிலையத்தில் பேசப்பட்டுக் கொண்டிருந்த நானாவித மொழிக் குரல்களும் ஒற்றுமையைப் பறை சாற்றி சங்கமமாகிக் கொண்டிருந்தது பல்வேறு நாட்டவரையும் பாகுபாடின்றி வாழ வைத்துக் கொண்டிருக்கும் சென்னைப் பட்டினத்தின் எழிலைக் கண்டு பூரிப்படைவதைப் போல் இருள்கப்பிய வானில் கண் சிமிட்டி மிளிர்ந்து கொண்டிருந்தன நட்சத்திரங்கள்!

மனோரம்மியமான அந்தச் சூழலைக் கடந்து செல்ல மனமில்லாதவனாக, வெறுமனே கிடந்த இருக்கையில் அமர்கிறேன்.

"ஐயா! பிச்சை போடுங்கய்யா!"

என் மௌனச் சிந்தையைக் கலைத்து எழுந்த அந்தக் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன்.

எண்ணெய் படாது வரண்டு, உலர்ந்து, செம்மை படர்ந்துவிட்ட தலைமயிரோடு பரிதாபமாக நின்று கொண்டிருந்தாள் ஏழு வயதுச் சிறுமியொருத்தி.

குழிவிழுந்த கண்கள்! எலும்பும் தோலுமான உடல்! கிழிந்து தொங்கிக்கொண்டிருக்கும் அழுக்கேறிய ஆடை!

வறுமையை உணர்த்திக் காட்டும் அந்தச் சிறுமியின் பிஞ்சுக்கரங்களில் தகரக் குவளையொன்று, சில சில்லறை நாணயங்களைப் பெற்று சலசலத்துக் கொண்டிருந்தது.

என் கையிலிருந்த எட்டணா நாணயமொன்றை மெதுவாகப் போட்டேன்.

நான் காசைப் போட்டதும் என்னை ஏக்கமாகப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள் சிறுமி.

"என்னம்மா வேணும்"?

மெதுவாகத்தான் கேட்டேன்.

"எங்கிட்டே மீதிக்குச் சில்லறை பத்தாதுங்களே!" பரிதாபமாகக் கூறியது அந்தப் பிஞ்சு உள்ளம்.

"வேண்டாம்மா! சில்லறை தர வேண்டாம்' நீயே அதை எடுத்துக் கொள்!!"

நான் பதில் கூறிப் பார்த்தபோது, அந்தச் சிறுமி குதூகல நடையோடு என்னைக் கடந்து கொண்டிருந்தாள்.

பிச்சைக்காரனிடம் பத்து காசைப் போட்டுவிட்டு ஐந்து காசைத் திருப்பிக் கேட்கும் தாராள தனவான்கள் இருப்பதால்தான் பிச்சைக்காரர்களும், தான் எதிர்பாராத தொகை கிடைக்கும்போது மீதித்தொகையை எண்ணிக் கொடுக்கும் அளவுக்குப் பழக்கப்பட்டுவிட்டனரென்ற உண்மையை எனக்குப் புரியவைத்து விட்டுச் செல்லும் அந்தச் சிறுமியின் நடை என் சாந்தியை எனக்கு நினைவூட்டியது.

ஆம்! அதே நடை!!

கடந்தகால வாழ்வெனும் குட்டையைக் கலக்கி, நினைவுச் சேற்றை மேல் கிளப்பிச் சுழலச் செய்துவிட்டது அந்த நடை!

அன்றொரு நாள்!

நான் பம்பாயிலுள்ள பெரிய கம்பெனியொன்றில் குமாஸ்தாவாகப் பணிபுரிந்து கொண்டிருந்தேன். உற்றார், பெற்றோர் அனைவரையும் பிரிந்து, தன்னந் தனியனாக ஐந்து ஆண்டுகளை பம்பாயில் நான் உருட்டி விட்டேன்.

ஆனால் அந்த ஐந்தாண்டு காலத்தையும் விட, என் வாழ்வில் ஒரே ஒரு நாள் ஏற்பட்ட நிகழ்ச்சியிருக்கிறதே, அதை என்னால் உயிருள்ள வரை மறந்துவிட முடியாது.

அன்று வெள்ளிக்கிழமை!

அலுவலக வேலைகளையெல்லாம் முடித்துக்கொண்டு, என் அறைக்குத் திரும்பிக் கொண்டிருந்தேன். ஜனத் திரள் நிறைந்த பம்பாய்ச் சாலையொன்றின் வழியே நான் வந்து கொண்டிருக்கும்போது, ஒரு சிறுமி—அப்போது வயது ஐந்தேதான் நிறைவுற்றிருக்கும்—என்னைக் கட்டிப் பிடித்துக்கொண்டு தேம்பித் தேம்பி அழுகிறாள்

காரணம் புரியாமல் நான் விழிக்கிறேன்.

பிறகு மெதுவாக அந்தக் குழந்தையிடம் பெயரைக் கேட்கிறேன்.

"சாந்தி!" என்றாள்.

ஊரைக் கேட்டேன்.

மிரள மிரள விழித்தாள்.

அவளுடைய பெயரைத் தவிர வேறெதையும் தெரிந்து வைத்துச் சொல்லமுடியாத குழந்தைப் பருவம்!

அந்தக் குழந்தையின் அப்பாவின் முகச் சாடையில் நான் இருந்த தனால்தானோ என்னவோ, அது உரிமையோடு என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருந்தது.

ஒன்றுமறியாத அந்தச் சின்னஞ் சிறுமியை உதறித் தனியே தவிக்க விட என் மனம் இடந்தரவில்லை. மனிதாபிமான உணர்வு என்னைத் தூண்டிக் கொண்டிருந்தது. பரந்து கிடக்கும் பம்பாய் நகரின் எந்த மூலையில் எப்படி வாழ்ந்து கொண

டிருக்கிருர்களோ அதன் பெற்ருேர்? பாவம்! குழந்தையைக் காணுது அந்தத் தாய் மனம் எப்படியெல்லாம் துடித்துச் சிதறுமோ?

ஏதோ ஒரு துணிவோடும் மன ஆறுதலோடும் அவளை என் இருப்பிடத்திற்கு அழைத்து வந்துவிட்டேன்.

நான் அழைத்து வந்த பிறகு, அவளுடைய தாயென்ருே, தந்தையென்ருே, உற்ருர், உறவினரென்ருே யாருமே வந்து அவளை கூட்டிப் போகவில்லை. நாளடைவில் அவள் என் மகளாகவே ஆகிவிட்டாள். இன்று இன்னெருவனுக்கு மனைவியாகவும் மாறியிருக்கிருள் என் சாந்தி.

ஆனல்......

என் சாந்தியை மனைவியாக்கிக் கொண்டவனை நினைக்கும்போது இப்போதும் கண்களில் ஈரம் கசிகிறது.

"பிரகாஷ்!"

இதுதான் அவளது கணவனின் பெயர்.


ஒரு பெண்ணின் வாழ்வுக்கு வளத்தை யுண்டுபண்ணும் பொறுப்புள்ள கணவனுக இருப்பானென்ற நம்பிக்கையில்தான் என் மகள் சாந்தியை அவனுக்கு மனைவியாக்கினேன்.

கட்டிய மனைவியை வீட்டில் வைத்துவிட்டு கண்ட பெண்களோடெல்லாம் இன்பம் துய்க்கும் மிருக வெறியனுக, மிதமிஞ்சிய குடி போதையில் ஒன்றுமறியாத தன் மனைவியைக் கை நீட்டி அடிக்கும் உதவாக்கரையாக ஆகிவிட்டவன் தான் என் மருமகனென்பதை இப்போதுதான் நான் உணர்ந்துகொண்டிருக்கிறேன்.

"அப்பா! அப்பா!!" என்று ஆனந்தக் குரலிட்டு என்னை அன்போடு அழைத்த என் சாந்தி, இன்று......

"அ...ப்...பா!...அப்...பா!!" என எக்காளமிட்டு ஏங்கித் தவிக்கும் அபலையாக வாழ்வு நடத்துகிருள் அந்தக் குடிகாரனேடு.

கருணையாளனென்று பக்தர் கூட்டத்தால் போற்றிப் பிரார்த்திக்கப்படும் அந்தப் பரமனுக்கு இப்படியுமா வேடிக்கை பார்க்கத் தோன்றுகிறது?



பொறுமையை நெஞ்சுக்குள் நிறைக்கிறேன். முடியவில்லை என்னல். அந்தப் பாழும் நினைவுகள் நெருஞ்சி முள்ளாகித் தைத்தன உள்ளத்தை. அதிலிருந்து நான்விடுபடும் நாள்தான் என் சாந்திக்கும் சாந்தத்தை அளிக்கும் நாளாக அமைய முடியும்.

பிரகாஷைத் திருத்த நான் எவ்வளவோ முயன்று கொண்டிருக்கிறேன். ஆனல் என் மகள் சாந்தியோ, உரியவனின் கீழ்ச் செயல் பிறருக்குத் தெரியக் கூடாதென்பதற்காக, அந்தக் கொடியவனிடமிருந்து எழும் தொல்லைகளையும் தாங்கிக் கொண்டு, கணவனே கண்கண்ட தெய்வமெனப் போற்றி வாழும் பாரதப் பெண் குலத்துத் தாரகையாக வாழ்ந்து கொண்டிருக்கிருள்.

பெண்ணினத்தை மென்மையான மலராகப் படைத்து, அந்தப் புனித மலரில் அன்புத் தேனையுண்ணும் வண்டினமாக ஆணைப் படைத்துவிட்டிருக்கும் இறைவன், இல்லற மணம் வீசுகின்ற அந்தப் பெண்ணினத்தை, வதைத்துச் சிதைத்து விடாதபடி, எல்லா ஆணுள்ளங்களிலும் கருணையை — மனிதத் தன்மையை,—நிறைத்துவைக்க ஏன் தான் மறந்தானே?

அறவாழ்வின் அன்புச் சுனையை சிலரது வாழ்வில்தான் வளர்க்கிருன் பலரது வாழ்வில் அறுத்துவிடுகிருன்.

அந்தப் பலருள் ஒருத்தியாகத் தான் சாந்தியும் வாழ்க்கையை ஓட்டுகிருள். கலங்கித் தெளிந்த நீராகி உறைந்துவிட்ட உண்மையின் கருப்பொருளை மனத்தில் நிறைவு படுத்திக் கொண்டவனுக வீட்டுக்குப் புறப்படத் தயாரானேன்.

வீட்டின் முன்பக்கத்து அறையில் கிடந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடி சிகரெட்டொன்றைப் புகைத்துக் கொண்டிருந்தேன்.

அப்போது, என் மகள் சாந்தியின் ஈனஸ்வர ஒலி கேட்பதைப்போன்ற நினைவு நிழலாடத் தொடங்கியது.

வீட்டில் மங்கலாகிக் கொண்டிருந்த மண்ணெண்ணெய் விளக்கின் ஒளியைத் தாண்டிவிட்டு வந்து அமர்ந்தேன். என் முன்னல் சாந்தி தான் நின்று கொண்டிருந்தாள்.

"அ....ப்....பா...அவரை....இன்னமும்...காணேம்!"

சிறுகுழந்தையைப் போல் தேம்பிக் கொண்டே நின்ருள் சாந்தமிழந்து. பொலிவற்றுப் போன வெறுமைக் கன்னத்தை தடமாக்கி உருண்டன கண்ணீர்த் துளிகள்.

"உட்காரு சாந்தி! வீணு ஏன் அழறே?"

நான் எவ்வளவோ ஆறுதல்களைக் கூறியும் அவள் மனம் ஏதோ ஒன்றை நினைத்துக் கலங்குவது நன்ருகப் புரிந்தது.

"அப்...பா!"

"சொல்லும்மா!"

"நீங்க...... அவரை யாருடைய

முன்னிலையிலாவது பகிரங்கமாகத் திட்டித் தீர்த்துட்டீங்களாப்பா! அவருடைய நடத்தையைப் பற்றி மற்றவங்க கிட்டேயும் உளறிட்டீங்களாப்பா!!''

சாந்தியைப் பார்த்து அழுவதா? சிரிப்பதா? என்று எனக்கேகூடப் புரியவில்லை.

''சாந்தி!! உன் கணவனை நான் கண்டித்ததென்னமோ உண்மை தான். ஆனால் மற்றவங்களுக்குப் புரியும்படியா அவ்வளவு வெளிப் படையா ஒண்ணும் பேசிடலேம்மா! ஏதோ எனக்கு அவனைத் திருத்தணும்னு தோணிச்சு. அதனாலே எனக்குப் பட்டதை அவங்கிட்டே கூறிப்பார்த்தேன். ஆனால் உங்கிட்டே ஆண்டவன் மேல் ஆணையிட்டுச் செய்து கொடுத்தேனே சத்தியம்! அதை ஒருக்காலும் நான் மறந்திடமாட்டேம்மா! உனக்காக, அவனை நல்லவனாக்கத்தான் நான் சொல்ல வேண்டியிருக்கு. ஏண்ணு எனக்கு மாப்பிள்ளையா வந்து வாச்சிட்டான் பாரு!''

அவளிடம் தேறுதல் கூறிக் கொண்டிருந்த என் கண்களிலும் கண்ணீர் கசிகிறது.

அவளுடைய மனம் நிம்மதி பெற வேண்டுமென்ற துணிவை முடிவாக்கிக் கொண்டவனாக, அவளுடைய கணவனைத் தேடிவரப் புறப்பட்டேன். தாளிடப்படாமல் திறந்து கிடந்த கொல்லைப் புறக்கதவைத் தாளிட்டு வருவதற்காக வீட்டின் பின்புறம் செல்கிறேன்.

அதே நேரத்தில்......

முன்பக்கத்து அறை இருள் கப்பி அவிந்துவிட்டதை நான் காணுகிறேன். ஏதோ ஒரு ஆணின் நமட்டுச் சிரிப்பொலியும் என் காதுகளுக்குக் கேட்கிறது. அதைத் தொடர்ந்து முன்பக்க அறை சாத்தப்படும் ஓசை!

திகிலும், திடமின்மையும், பயமும் பயங்கரமும் என்னை ஒரே நேரத்தில் ஆட்டிப்படைத்தன.

கையிலிருந்த தீப்பெட்டியில் குச்சை உரசிப்பிடித்தேன்.

அணைந்துவிடத் துடிக்கும் அந்தச் சிறு ஒளியின் மூலமாக, என் முன்னே நின்றுகொண்டிருந்த உருவத்தை யாரென்று உணர்ந்து கொண்டேன்

''பி...ர...கா...ஷ்!''

வேதனையை நிறைத்துப் பொருமியிருந்த என் உள்ளத்திலிருந்து, உணர்ச்சிமயமாகி வெடித்தது அந்த வார்த்தை!

''மாமா!''

அவன் அமைதியாகக் கூறுகிறான்.

நான் மௌனமாகி நிற்கிறேன்.

''பந்தத்திற்கும், பாசத்திற்கும், அன்பிற்கும், அழகுக்கும், அப்பாற்பட்ட தனிச் சக்திவாய்ந்த — எதையுமே சாதித்துக் காட்டும் திண்மை மிக்க ஆயுதத்திற்குப் பெயர்தான் பணம்! ஒப்புக்கொள்கிறீர்களா?''

தத்துவம் பேசுகிறான் அவன்.

பதில் கூறமுடியாது, பதை பதைத்து நிற்கிறேன் நான்.

''மாமா! நான் என் மனைவிக்குக் கூடத் தெரியாமல், நடத்திவந்த கள்ளநோட்டுத் தொழிலின் ரகசியத்தைப் புரிந்துகொண்ட நீங்கள், இன்று என்னிடம் எச்சரிக்கை செய்தீர்களே அதைக்கூடவா மறந்து விட்டீர்கள்? நான் சொல்வதைப் புரிந்துகொள்ள முடியாமல் ஏன் இன்னமும் குழம்புகிறீர்கள்?''

''இல்லை! இல்லவே இல்லை!! நான் குழம்பிப் போகவில்லை. குமுறிக் கொண்டிருக்கிறேன். உன் மனைவி சாந்தி என்னிடம் வாங்கிக் கொண்ட சத்தியத்தின் விளைவை எண்ணிப் பார்த்து வேதனையடைகிறேன்! அளவுக்குமீறிக் குடித்து விட்டு, சாந்தியை நீ அடித்துத் துன்புறுத்துவதை சகித்துக்கொள்ள முடியாமல்தான் நான் உன்னிடம், அந்த புதுப்பழக்கத்தை நிறுத்திவிடும்படி எச்சரித்தேனே தவிர, இப்போது நீ கூறி நான் அறிந்து கொண்டிருக்கும் கள்ள நோட்டுத் தொழிலைப்பற்றியல்ல! உன்னை நான் பகிரங்கமாகத் திருத்துவதற்குத் தடையாக இருந்தவளும் சாந்தியே தான். காரணம் என்ன தெரியுமா? கணவனின் மானம் பறிபோவதை சகித்துக்கொள்ள முடியாத தன் மானமுள்ள உத்தமி அவள்!

பலபேருக்கு மத்தியில் தன் கணவனைத் திட்டித் தீர்த்துவிடக்கூடாதென்பதற்காக அவள் என்னிடம் சத்தியமே வாங்கிவிட்டாள். அதன் பலன் இப்படி விபரீதமாக விளையுமென்று நான் எண்ணிக் கூடப் பார்த்ததில்லை.''

முடித்துவிட்டு, முன் பக்கத்து அறைப்பக்கம் செல்கிறேன்.

''மாமா! என்னை மன்னித்துவிடுங்கள்!! என் தொழில் ரகசியத்தைப் புரிந்து கொண்டுதான் தாங்கள் பேசியதாக தவருக எண்ணிவிட்டேன். அடுத்தவன் நன்ருகப் பணம் பெற்று வாழ்வதைக் கண்டு பொருமைப்படும் மானிட வர்க்கத்தில், சுற்றத்தின் பந்தத்தைக் கூடப் பண சக்தி முறியடித்து விடுகிறது மாமா!! என் மனைவி சாந்தியின் வளர்ப்புத் தந்தையாக தாங்கள் இருப்பதால், ஒருவேளை என் தொழிலைப்பற்றித் தகவல் தெரிவித்து விடுவீர்களோ என்ற மிக மட்டரகமான முட்டாள்தனத்தோடுதான் உங்களையே கொல்லத் துணிந்து வந்து விட்டேன், நான் வந்த வேகத்தில், வீட்டிலெரிந்த விளக்கும் அணைந்து விட்டபடியால், யாரென்று கூடப் புரிந்துகொள்ள முடியாமல், ஆத்திரத்தில் அறிவை இழந்து உங்கள் ...மனைவியையே ... கொலை செய்து விட்டேன்! இந்தப் பாவியை மன்னித்து விடுங்கள் மாமா!''

என் பாதங்களில் விழுந்து கிடந்தான் பிரகாஷ்.

''பிரகாஷ்! நீ நினைப்பதைப்போல் கொலை செய்யப்பட்டவள் என் மனைவியாக இருந்திருந்தால் கூட நான் ஓரளவு நிம்மதி பெற்றிருப்பேன், ஆனால்... இல்லற வாழ்வின் முழு இன்பத்தைப் பெற்றுவிடத் துடித்துக் கொண்டிருந்த ஒரு அபலையை — உன்னால் நிம்மதியான வாழ்வைக் கொடுக்க முடியாத என் மகள் சாந்தியைத்தான் நீ...கொலை செய்துவிட்டாய்!''

குமுறிச் சிதறிய எரிமலைக் குழம்பாகி உருகி உருக்குலைந்திருக்கும் உள வேகத்தோடு, படீரெனத் திறந்தேன் முன்பக்கத்து அறையை!

வாழ்வுப் போராட்டத்தில் தோல்வி பெற்றுவிட்ட அந்தப் பேதை நெஞ்சம், இரத்தச் சேற்றில் உடலைக் கிடத்தி, சிதைந்து கிடந்தது!

---

## பெண்

பெண்கள் நம்மை ஆட்சி புரிகின்றனர்; அவர்கள் மேலும் நிறைவுடையவர்களாக விளங்கும்படிச் செய்வோம். அவர்கள் எவ்வளவுக்கு அறிவொளியைப் பெறுகின்றனரோ, அவ்வளவுக்கு நாம் அறிவு பெறுவோம். பெண்களின் மனங்களைப் பயிற்சி வதையே ஆடவனின் அறிவு பொறுத்திருக்கின்றது,

—ஷெரிடன்.

# இவையெல்லாம் இவ்வுலகச் செய்திகளே!

## முதலில் அதைச் செய்!

ஒருவன் எவ்வளவுக்கெவ்வளவு உயர்ந்த நிலையை அடைகின்றானோ, அவ்வளவுக்கவ்வளவு அடக்கம், பணிவு முதலியவைகளும் பெருகவேண்டும் என்பது வள்ளுவம். ஒருவன் அல்லது ஒருநாடு பொருளாதாரத் துறையில் எந்த அளவுக்கு உச்சியில் இந்தாலும், மனிதப் பண்பு அங்கே இடம் பெறவில்லையென்றால், மதிப்புகால் தூசுக்குக்கூட சமமாக மதிக்கப்பட முடியாததாகும். அமெரிக்கா செல்வச் செழிப்பில் மிக உயரத்திலிருக்கிறது. அமெரிக்க மக்களில் 100க்கு 88 பேர் வரை வாழ்க்கை வசதிகள் அனைத்தும் கிடைக்கப் பெற்றிருப்பவர்கள். என்றாலும் அந்த நாட்டின் அண்மைக்கால நடைமுறை நிகழ்ச்சிகளைப் பார்க்கிறபோது அமெரிக்காவில் மனிதப் பண்பாடு என்று ஒன்று இருக்கிறதா? என்ற ஐயமே ஏற்படுகிறது. துப்பாக்கிச் சூடுபட்டு மாண்டுபோவோர்தொகை, மற்றெந்த நாட்டைக் காட்டிலும் அங்குதான் அதிகம். அதிலும் உயர் பதவியிலிருப்போர். அடிக்கடி இதுபோன்ற பயங்கரத்தைச் சந்திக்கவேண்டிய துர்ப்பாக்கியம் தலைதூக்கி இருக்கிறது. கென்னடி சுடப்பட்டார் — ஜான்சனும் இதுபோன்ற பயமுறுத்தலுக்கு ஆளானார்—ராபர்ட்கென்னடியும் துப்பாக்கிக்குப் பலியானார் — மார்ட்டின் லூதர்கிங்கும் கொலையுண்டார்—இப்போது இன்னமும் பதவியில் அமராத நிக்சன்கூட படுகொலைச் சதியிலிருந்து தப்பி இருக்கிறார் என்று வரிசைப் படுத்திப் பார்க்கிறபோது, பதவிப் பொறுப்புக்கு வந்தவுடனேயே நிக்சனுக்கு மகத்தானதொரு பணி காத்திருக்கிறது என்றே நம்ப வேண்டியிருக்கிறது. அமெரிக்க மக்களின் என்று ஒட்டு மொத்தமாகக் கூறுவிட்டாலும் — தலைதூக்கியுள்ள வன்முறைச் செயல்களை வளர்க்கும் உள்ளங்களை, அவர் முதலில் சுத்தப்பட வேண்டியதிருக்கலாம்! முழுதுமாக களைந்தெரியப்பட்டால்தான், எஞ்சியுள்ள நாட்களை, அமைதியான முறையில் மக்கள் சேவைக்கும், நாட்டு நலனுக்கும் தம்மை அர்ப்பணித்துக்கொள்ள முடியும்!

## தத்துவம் பரவுகிறது?

"பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் சுட்டுக் கொல்லப்பட்டார்" என்று துரதிருஷ்டவசமாக நாம் செய்தி படிக்க வேண்டிய நிலைமையிலிருந்து நல்ல வேளையாக உயிர்தப்பி இருக்கிறார். இது தொடர்பாகக் கல்லூரி மாணவன் ஒருவன் உடனடியாகக் கைது செய்யப்பட்டிருக்கிறான். வெளிநாட்டிலாகா அமைச்சராகவிருந்து வெளியேறிய அல்லது வெளியேற்றப்பட்ட பூட்டோவின் அரசியல் செல்வாக்கு மிகுந்திருப்பதனால், அதன் எதிரொலியாக அதிபர் அயூபின் ஆட்சிக்கு முடிவேற்படலாம் என்ற யூகமான பேச்சின் எதிரொலியால், பாகிஸ்தானின் பல பகுதிகளில் மாணவர் கலவரங்கள் ஏற்பட்டதும், துப்பாக்கிச் சூடுகள் நடந்ததும், கல்விக்கூடங்கள் மூடப்பட்டிருப்பதும் சாதாரண சம்பவங்களாகத் தெரியவில்லை. கொலை உணர்வைத் தூண்டும் அளவுக்கு அரசியலில் வெறித்தனம் புகுந்து விட்டிருக்கிறது என்றுதான் மதிப்பிடவேண்டிருக்கிறது. பூட்டோவும், அவரது ஆதரவாளர்கள் எனப்படும் இன்னும் 14 பேரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். பூட்டோமீது ஏற்கெனவே ஊழல் வழக்கொன்றும் நீதி மன்றத்திலிருக்கிறது. அடுத்துவரவிருக்கும் அதிபர் தேர்தலுக்கு, பூட்டோ அயூபை எதிர்த்து நிற்க விருக்கும் நிலைமைக்கு இச்சம்பவங்கள் எந்த அளவுக்கு அனுகூலம் உண்டாக்கும் என்பது இனிமேல்தான் தெரிந்துகொள்ளவேண்டும். ஆனால் எந்த நாடாயினும், துப்பாக்கி முனையில் தான் அரசியல் தீர்வு என்று கருதும் நிலைக்குத்தன்னைத் தயார்படுத்திக் கொள்ளுமானால், மாசேதுங் தத்துவம் வெற்றியடைந்து வருகிறது என்பதை ஒப்புக்கொள்ளாமலிருக்க முடியாது!

## முதுகில் தூசு—முதலில் அகற்று!

மூன்று கிழமைகளுக்கு மேலாக அரசு அலுவலகம் ஒன்றில் வேலை நிறுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கிற ஒரு செய்தி இப்போது கிடைத்திருக்கிறது. சுமார் 1600 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டிருக்கிறார்கள். வேலை நிறுத்தத்துக்கான காரணம், சனிக் கிழமையன்றும் தங்கட்கு விடுமுறை விடப்பட வேண்டும். போனஸ் கொடுக்கப்படவேண்டும் என்பதுதானும்!! இதில் நிர்வாகச் சிக்கல்கள் இருக்கக்கூடும். அதனால் அரசும் கோரிக்கைக்கு இணங்க மறுத்திருக்கலாம்! வேலை நிறுத்தமும் ஏற்பட்டிருக்கலாம்! ஆனால் தொழிலாளர்களுக்காகவே, தொழிலாளர் தலைவர்களால் அமைக்கப்பட்டிருக்கிற ஒரு ஆட்சியில், அதன் அரசு ஊழியர்களுக்கு இந்த நிலை என்கிறபோதுதான் பிரச்னையாகிப் போகிறது. உலகத் தொழிலாளர்களே ஒன்றுபட்டுப் போராடுங்கள் என்று உரத்தக் குரல் எழுப்பியும், எழுப்பப் பயன்பட்டும் வருகிற ஆட்சியில்தான் இந்த நிலை என்கிறபோது யார் இரட்டை முகம் படைத்திருக்கிறார்கள் என்ற சந்தேகம் வருவதும் இயற்கைதானே! தன் முதுகைத் துடைத்துவிட்டுக் கொண்டு, அடுத்தவன் ஆடைத் தூசைப் பற்றிப் பேசு என்பார்கள் பெரியவர்கள்! என்றால்தான் என்ன? கேரள அரசும், அதன் முதல்வர் ஈ. எம். எஸ். நம்பூதிரிபாடும் தொழிலாளர்கள் பற்றிப் பேசாமலிருக்க முடியாது. வேலை நிறுத்த உரிமையைப் பற்றி எடுத்துக் காட்டாமலிருக்கவும் முடியாது.


## அப்படித்தான் இருக்கும் அரசியல்!

எப்படியோ ஒருவாறாக நாகர்கோயிலில் காமராசர் நிறுத்தப்படுவார் என்று முடிவாகி விட்டதாகப் பேச்சு அடிபடுகிறது. த நா. கா. க. இப்படித் தீர்மானித்து விட்டதாக பூவராகன் என்பவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே சுப்பிரமணியனார், அப்படி எதுவும் தீர்மானிக்கப்படவில்லை என்று மறுக்கிறார். இவையெல்லாம் காங்கிரசுக்குள்ள — காங்கிரசுக்கே உரிய நடைமுறைகள்தான்! என்றாலும் நாகர்கோவிலில் நிற்கப் போவது காமராசர்தான் என்பது நிச்சயிக்கப்பட்டு விட்டது. இவ்வாறு தீர்மானிக்கப்பட்டதில் இரண்டு வித மதியூகங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. வெற்றி பெற்றால் தமிழ் நாட்டுத் தொல்லை ஒயட்டும் என்பதும், தோற்றால் முழுவதுமாக அடங்கட்டும் என்பதும் உட்கருத்தாம்! அரசியல்தானே! அப்படித்தான் இருக்கும்.

—ராஜிமணாளன் தொகுத்தவை.



மேயர் வேலூர் நாராயணன் அவர்கள்



துணைமேயர் கோவிந்தசாமி அவர்கள்

# அண்ணல் காந்தி

—கவிஞர் மணிவேந்தன், எம்.ஏ.,—

மூச்சில் கலந்தவளே! முரசாய் ஒலிப்பவளே!
பேச்சில் பிணைந்து பேரின்பம் தருபவளே!
மாவேந்தர் சீராட்ட மண்ணகமே பாராட்ட
பாவேந்தர் தாலாட்ட பாசமுடன் வளர்ந்தவளே!
மூவேந்தர் காலத்தில் முடிசூட்டி ஆண்டவளே!
முச்சங்கம் தனில்இருந்து முன்னேற்றம் கண்டவளே!
படைக்கோ லம்கொண்டு பாராண்ட நிலைமாறி
இடைக்கா லம்தன்னில் இருள்மூடிக் கிடந்தவளே!
இருட்படலம் விலக இருபதாம் நூற்றாண்டின்
அருட்படலம் ஆக அவதரித்த ஒளிப்படலம்
காஞ்சி புரமண்ணில் கண்ணுக்குத் தெரிந்திடவே
வாஞ்சையுடன் அந்நகரை வாயாரப் புகழ்பவளே!
முற்காலப் பெருமையெல்லாம் தற்காலம் வந்தடைய
பொற்காலத் தமிழகத்தின் புகழ்க்கோலம் காண்பவளே!
தாரணியில் மூத்தவளே! தன்மானம் காத்தவளே!
சீரணியில் தமிழர்களை ஓரணியாய்க் காண்பவளே!
கப்பியுள்ள இருள்அகற்றும் கதிரவனாய்த் திகழ்பவளே!
ஒப்பில்லாத் தமிழே!என் தாயேஉன் தாள்வணக்கம்!!
ஒளிகொடுக்கும் மணிவிளக்காம் உன்முன்னால் கவிபாடக்
களிப்புடனே வந்துள்ளேன்; காத்தருள்வாய் அம்மாநீ!

கடமைவழி நிற்பவரே! கண்ணியத்தைக் காப்பவரே!
கட்டுப்பா(டு) உடையவரே! காஞ்சிநகர் வாழ்பவரே!
மானத் தமிழை மறத்தமிழைப் போற்றுகின்ற
மாண்புள்ள மாணவரே! மங்கையரே! தங்கையரே!
சாந்தி வழிநடந்த சரித்திரத்தின் நாயகனாம்
காந்தி புகழ்பாடக் களிப்போடு விழாவெடுக்கும்
நல்லவரே! வல்லவரே! எல்லோர்க்கும் என்வணக்கம்!
பல்லவர்கள் ஆண்ட பழம்பதியே! பிழைபொறுப்பாய்!

அவனி முழுதும் அடக்கிஒரு காலத்தில்
பவனிவந்த பரங்கியனைப் பாரறியும் ஊரறியும்;
சுட்டு விரலசைத்தால் சுருண்டிடுவோர் எதிர்ப்போர்கள்
கட்டவிழ்த்து விட்டதொரு காட்டரசே எனும்படிக்கு
நாட்டை அடிமையாக்கி நமதரிய தாயகத்தை
வேட்டைக் காடாக்கி விளையாடி மகிழ்ந்திருந்தான்!
வெள்ளை நிறத்தோடு கள்ளம் மிகக்கலந்து
கொள்ளை அடித்திடவே கூடாரம் போட்டிருந்தான்!
கடல்கடந்(து) இங்குவந்து காலடி வைத்தவனின்
உடல்தானே வெள்ளைநிறம் உள்ளமோ கருப்புநிறம்
உரிமை கேட்பவரை உதைத்தான்; வதைத்திட்டான்
உரிய விடுதலையின் கருவறுக்கத் துணிந்திட்டான்;
விடுதலையின் வரலாறு தொடருகின்ற வேளையிலே
கெடுதல் தொலைத்திடவே கீர்த்திமகன் வந்துதித்தார்!
பண்கெட்ட நிலமாகக் கண்கெட்ட முகமாக
வதைபட்டு வகைகெட்டே உதைபட்ட கதைமாற
சதைகுத்திக் கிழித்தாலும் சஞ்சலமே கொள்ளாது
விடுதலைப் பெரும்படைக்குக் காந்தியார் தலைமையேற்றார்
'கடுகடுத்த' வெள்ளையனோ 'கலகலத்து'ப் போய்விட்டான்!
ஆயுதங்கள் காட்டி அடக்கவந்த வெள்ளையன்முன்
ஆயுதமாய் 'அஹிம்சை'யைக் காட்டியவர் காந்தியன்றோ?

ROCKFORT
BRAND
DALMIA
CEMENT

# இப்பொழுது
# தாராளமாகக் கிடைக்கிறது

கட்டுப்பாடுகள் ஒன்றும் இல்லாமல்

A DALMIA ENTERPRISE

**டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட்**

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் அண்டு வொர்க்ஸ்: டால்மியாபுரம் (சென்னை மாநிலம்)

ஸோல் ஸெல்லிங் ஏஜண்ட்ஸ்: சிமெண்ட் டிஸ்ட்ரிப்யூடர்ஸ் பிரைவேட் லிமிடெட

டால்மியாபுரம் (சென்னை மாநிலம்)

துப்பாக்கிக் காட்டி தொலைவந்த வெள்ளையன்முன்
தப்பாது பொறுமையினைக் காட்டியவர் காந்தியன்றோ?
தடியடியால் விடுதலையைத் தகர்க்கவந்த வெள்ளையனைப்
பொடியாக்கிப் போட்டவரும் பூதலத்தில் காந்தியன்றோ?
அதிகாரம் அடக்குமுறை அத்தனைக்கும் அஞ்சாது
சதிகாரக் கும்பலையே சாய்த்தவர்யார், காந்தியன்றோ?
பணிவுக்கு உறைவிடமாய்ப் பண்புக்கும் புகலிடமாய்
துணிவுக்குப் பெட்டகமாய்த் துலங்கியவர் காந்தியன்றோ?
அடக்கத்தின் துணைகொண்டே ஆதிக்கக் கொடுமையெனும்
தடைக்கல்லைத் தகர்த்தெறிந்த தளபதியார் காந்தியன்றோ?
ஆப்பிரிக்க மண்ணினிலே அவதியுற்ற இந்தியரைக்
காப்பாற்ற முனைந்திட்ட கருணைமகான் காந்தியன்றோ?
அந்நாட்டில் தில்லையாடி அழகுமகள் வள்ளியம்மை
தென்னாட்டின் புகழ்வளர்க்கக் காரணம்யார் காந்தியன்றோ?
கோழையெனச் சொல்வார்முன் குலுங்கச் சிரித்திடுவார்
ஏழைமனக் கோயிலிலே என்றும் குடியிருப்பார்
அன்னவரே காந்திமகான்! அவனியிலே அமைதிக்கு
மன்னவரே காந்திமகான்! மற்றென்ன நான்சொல்ல?
குடிமக்கள் இருந்தால்தான் குடியரசு மேலோங்கும்
'குடி'மக்கள் பெருகிவிட்டால் குடியரசும் என்னாகும்?
குடிகெடுக்கும் தன்மையுள்ள 'குடி'யென்னும் பெருமரத்தின்
அடிவேரை அறுத்தெரிய ஆர்த்தவர்யார் காந்தியன்றோ?

'மதுவென்னும் அரக்கிக்கு மனத்தாலே தடைபோட்டு
புதுவாழ்வு காண்'என்று புகன்றவரும் காந்தியன்றோ?
மதுவிலக்குக் கொள்கையிலே மாறா உறுதியுடன்
மதிவிளக்கம் தந்தவர்யார்? மகாத்மா காந்தியன்றோ?
திண்ணமுடன் மதுவிலக்கைத் தீரமுடன் கடைப்பிடிக்கும்
அண்ணல்'அவர் வாரிசு 'அண்ணா'எனில் தவறாமோ?
பொன்னேட்டில் தமிழகத்தின் புகழேட்டில் அண்ணாதான்
'தென்னாட்டுக் காந்தி'எனும் திருப்பெயரைப் பதித்துவிட்டார்!
காந்திமகான் நல்ஆத்மா தமிழகத்தின் உறுதிகண்டு
சாந்தி அடைந்திடுமாம்; சந்தேகம் தேவையில்லை!
நூற்றாண்டுத் தொடக்கவிழா நன்னாளில் அண்ணலினைப்
போற்றிடுவோம்; புகழ்மாலை சூட்டிடுவோம்; அவர்கொள்கை
ஏற்றிடுவோம்; இதயத்தால் வணங்கிடுவோம்; நற்செயல்கள்
ஆற்றிடுவோம்; அவர்எண்ணம் ஈடேற உழைத்திடுவோம்!
மாசில்லா மகாத்மாவின் மாண்புவழி நடந்திடுவோம்!
காசினியில் காந்திபுகழ் காலமெலாம் பாடிடுவோம்!

உயிரான தமிழால்;என் உணர்வான தமிழால்;நல்
உயர்வான தமிழால்;இவ் வுலகாண்ட தமிழால்;நான்
ஒருகோடி நன்றியினை உங்களுக்குப் படைத்(து) என்றன்
ஒருகவியை முடிக்கின்றேன்; உயிர்த்தமிழே! வாழியநீ!!

★

(காஞ்சிபுரம், காந்தியடிகள் நூற்றாண்டு விழாவில் பாடியது)

# எரியாத வீடு-  ஒரு சிக்கல்!

"அரசினர் நிலத்திலும், மாநகராட்சியின் நிலத்திலும் எரியாத வீடுகளை எளிதில் கட்டித்தர முடிகிறது; ஆனால் தனியாருக்குச் சொந்தமான நிலங்களில் எரியாத வீடுகளைக் கட்டித்தர அவர்கள் மனப்பக்குவம் பெருத காரணத்தால்—இரக்கக் குணம் பெருத காரணத்தால் ஒப்புதல் அளிக்க மறுக்கிருர்கள்!

"இன்னும் சில தனியார், அந்த நிலங்களில் மீண்டும் குடிசைகளைக் கட்டி வாடகைக்கு விட்டு அதிக இலாபம் பெறலாமென நினைக்கிருர்கள்; இதனல், 'எரியாத வீடுகள் கட்ட நிலத்தைக் கொடுங்கள்' என்று கேட்டால், இதுதான் சமயமென்று நான்கைந்து மடங்கு விலையைச் சொல்லுகிருர்கள்! இந்த இடையூறுகளால், பணமிருந்தும் நிலமிருந்தும் அந்த வீடுகள் கட்டப்படாமல் உள்ளன!

"நிலச் சொந்தக்காரர்களாக உள்ள தனியாருக்கு ஒரு வேண்டுகோள்விடக் கடமைப் பட்டிருக்கிறேன்; நல்ல மனப்பக்குவத்தைப் பெற்று–ஏழை எளியவர்கள்பால் இரக்கச் சிந்தையோடு உங்கள் நிலத்தைத் தருவீர்களானல், உங்கள் பெயரைச்சொல்லி உங்கள் பெயர் நிலைக்க எரியாத வீடுகளைக் கட்டித் தரலாம்! தாராள மனத்தோடு நிலத்தைக் கொடுங்கள்—அன்பளிப்பாக அல்ல—பரிசுப் பொருளாக அல்ல—'ஏழைகளுக்கான எரியாத வீடுகள் கட்ட நியாயமான விலைக்குக் கொடுங்கள்' என்று தான் கேட்கிறோம். பணமிருந்தும் இடமிருந்தும், 'இரக்கமில்லை' என்றுள்ள நிலை மாறவேண்டும்"

முன்பெல்லாம் மழையால்—வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடிசைவாழ் மக்கள், மாநகராட்சிப் பள்ளிகளைத் தாங்கள் வாழ்கின்ற கூடங்களாக மாற்றிக் கொள்வதும், அவர்களுக்காக மாநகராட்சிப் பள்ளிப் பிள்ளைகளுக்கு விடுமுறை விடுவதும், வள்ளல் தன்மை உள்ள மக்களும் மாநகராட்சியும் பேருதவி புரிந்து சோறிட்டுக் கஞ்சி வார்த்து-மழை தணிந்து வெள்ளம் தணிந்ததும் தங்களது பழைய இடங்களுக்கே அந்த மக்கள் போவதும் இருபதாண்டுகளாக நடந்துவந்ததை நாம் பார்த்திருக்கிறோம். ஆனல் கடந்த இரண்டு ஆண்டுகளில் — கழக அரசு ஏற்பட்ட பிறகு — இந்த மக்களுக்கு அளிக்கப்பட்டு வந்த நிவாரணத் தொகை ரூ. 40 ஆக இருந்ததை ரூ. 80 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

மாநகராட்சி மன்றம் வழங்கிவந்த நிவாரணத் தொகை ரூ. 10 ஆக இருந்தது; அது இப்போது ரூ. 30 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வாறு உயர்த்தி அளித்ததோடு, எரியாத வீடுகளைக் கட்டித்தரும் பணியிலும் கழக அரசு ஈடுபட்டுள்ளது. முதலில் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி—முதலமைச்சர் பெயரால் நிதி திரட்டுவதென்று தீர்மானித்து—அதற்காக ரூ. 40 இலட்சம் இது வரையில் வசூலிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சியின் துணையோடும் வீட்டுவசதி வாரியத்தின் துணையோடும் அரசு சார்பில் இது வரையில் பதினைந்து இலட்சம் ரூபாய் செலவில் இரண்டாயிரம் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 'ஏன் மிச்ச பணம் செலவிடப்படவில்லை; மீதிமுள்ள வீடுகள் ஏன் கட்டப்படவில்லை' என்று கேட்கப்படுகிறது. இங்கேயுள்ள சிக்கலை நாம் சிந்திக்கவேண்டும்.

இவர்கள் இதுவரையில் தங்கள் மனதை மாற்றிக்கொள்ளாததால்தான், சுப்பிரமணியம் போன்ற பொறுப்புள்ள காங்கிரசுக்காரர்களும்கூட, 'எங்கே அந்தப்பணம்? ஏன் செலவிடப் படவில்லை?" என்று கேட்கிருர்கள்.

'தென் சென்னைத் தேர்தலுக்குச் செலவிட்டு விட்டார்கள்' என்று சொன்னர்கள்; 'தென் காசித் தேர்தலுக்குச் செலவிட்டு விட்டார்கள்' என்று சொன்னர்கள்.

மாநகராட்சித் தேர்தல் சமயத்திலும், 'அந்தப் பணம் முழுவதும் மாநகராட்சித் தேர்தலுக்காகச் செலவிட்டுக் கும்மாளம் போடுவதாக'ச் சொன்னர்கள்.

இவர்கள் சொல்வதுபோல இந்தப் பணம் தென் சென்னை இடைத்தேர்தலில் செலவாகி இருக்குமேயானல் மீண்டும் அது தென் காசிக்கு எப்படி வந்தது? தென்காசியில் செலவாகியிருந்தால் அதே பணம் மாநகராட்சித் தேர்தலுக்கு எப்படி வந்தது?

ஏழை எளிய மக்களுக்கு எரியாத வீடுகள் கட்டித் தருவதற்கென்று வசூலான துயர் துடைப்பு நிதி அத்தனையும், மாநில அரசின் நிதித்துறை நிர்வாகத்தினரால் தனிக் கணக்கில் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது."

—சென்னைக் கூட்டத்தில் கலைஞர் மு. கருணாநிதி.

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-8
8C, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.